
ஸினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும்
உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!
சோபனா சமர்த்
சோபனா பிரதி தினமும் கையாளும் ஒரு அழகிய வழக்கம் இதுதான். காலையிலும் மாலையிலும் அவர் தன் சருமத்தில் லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையைத் தடவி, பிறகு சுத்த ஜலத்தில் அலம்புகிறார். ''என் சருமத்தை அழகாகவும், பளிச்சென்றும், தூய்மையாகவும், வைத்துக்கொள்ள நான் தவறாமல் செய்யும் முறை இதுதான்'' என்று அவர் சொல்லுகிறார். இன்னும் அநேக சினிமா நட்சத்திரங்களும் அப்படியேதான் சொல்லுகிறார்கள்.
லக்ஸ் டாய்லட் ஸோப்
LEVER BROTHERS (INDIA) LIMITED

திரைக்குத் தயார் !

இன்றே புக் செய்யுங்கள் !!

ராதா ரமண

(கன்னடம்)

★ எம். வி. ராஜம்மா

★ பி. எஸ். பந்துலு

★ ஸ்ரீனிவாஸ ராவ்

முதலியோர் நடிப்பது

ஏஹி துனியா

(ஹிந்தி)

★ விஜயகுமார்

★ ஆஷா லதா

★ ரோஷனரா

★ பாய்சிலா

★ அஸூரி

முதலியோர் நடிப்பது

மதராஸ் ஸிடி உள்பட
தமிழ்நாடு முழுவதற்கும்
விநியோகஸ்தர்கள் :

ஸ்ரீ ரமண பிக்சர்ஸ்,

மதுரை




உங்கள் கேசத்தை அழகு படுத்த

பெங்கால்
கெமிகல் கோல்ட்
ஹேர் பின்ஸ்

உபயோகியுங்கள்

தங்க நிறமான இந்தக் கொண்டை ஊசிகள் உங்கள் கேசத்திற்கு ஒரு ஆபரணமாக விளங்குவதுடன், பிஜ்ஜாடை, எஸ்கட்டு, சொருக்கு, பர்மீஸ் கொண்டை மற்றும் பலவித நவீன தலை யலங்காரங்களுக்கும் இன்றியமையாதது.



தயாரிப்பவர்கள் :

பலராம் & கோ.
74, ஆச்சாரப்பன் தெரு,
ஜி. டி. — மதராஸ்.

நமது B. C. G. காலர் பின்கள்
மாணவர்களின் அணிகலமாய்
விளங்குகிறது.

கல்கி பொருளடக்கம்

மலர் 4 இதழ் 43 | 1945 ஜூன் 3 | பார்த்திப வைகாசி 21



"வெற்றி யெட்டுந் திக்குமெட்டக் கொட்டு முரசே!"

என்று பாரதியார் பாடினார். நாலா புறமும் சோர்வு குடி கொண்டிருந்த காலத்திலே இருள் சூழ்ந்திருந்த சமயத்திலே, வெற்றியின் ஒரு மெல்லிய கிரணங்கூடக் கண்ணுக்குப் புலனாகாதிருந்த நாளிலே, மேற்கண்டவாறு அந்த மகாகவி முரசு கொட்டினார்.

பாரதியார் அமர வாழ்வு எய்தி இருபத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைய தினம் (1945-ஆம் ஜூன் 3-ல) அதி காலையில், சூரியோதய நேரத்தில், பாரதியார் பிறந்த எட்டயபுரத்தில் அவருடைய ஞாபகார்த்தமாகக் கட்டப் போகும் பாரதி மண்டபத்துக்குக் கால்கோள் விழா நடைபெறுகிறது. நமது அரும் பெருந் தலைவர் ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அஸ்திவாரக் கல் நாட்டுகிறார்.

இன்று மகாகவி பாரதியார் ஞாபகார்த்த மண்டபத்துக்காக ராஜாஜியினால் அமைக்கப்படும் அஸ்திவாரம், தமிழ் மக்களின் மகோந்நதமாகிய மாளிகைக்கே மா பெரும் அஸ்திவாரமாக நிலைபெற்று நிற்கும் என்று நம்புகிறோம்.

கல்கி

மலர் 4 } தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 43

என்ன சேதி?

"பதவி மோகம்"

கோகலே மண்டபத்தில் சென்ற திங்கட்கிழமை மாலை நடந்த குதூகலமான மாபெருங் கூட்டத்தில் தலைவர் ராஜாஜி "பதவி மோகம்" என்று குற்றம் சாட்டுகிற புத்திசாலிகளுக்குச் சரியான பதில் சொன்னார். "ஆமாம்; எனக்குப் பதவி மோகந்தான். இந்த தேசம் இப்படிப்பட்ட கேவலமான நிலைமையில் இருக்கிறதே. இதற்கு நல்ல பதவி வர வேண்டுமே என்று எனக்கு அசாத்திய மோகந்தான்!" என்றார். "மோகம் மட்டுந்தானா? கோபம்கூட வருகிறது! இந்த மாகாணத்து ஜனங்களிடமிருந்து 40 கோடி ரூபாய் வருஷா வருஷம் வரி வசூலிக்கிறார்களே! இந்தப் பணத்தைக் கொண்டு நாட்டுக்காக எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்யலாமே, எல்லாம் வீணாய்ப் போகிறதே என்று எனக்குக் கோபம் வரத்தான் செய்கிறது!" என்றார். மற்றப்படி, மந்திரி உத்தியோகத்தில் தமக்கு மோகம் ஏற்படுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்று சபையோரைப் பார்த்துக் கேட்டார்.

"இரண்டு வருஷம் மந்திரி உத்தியோகம் பார்த்தபோது நான் என்ன சந்தோஷத்தைக் கண்டேன்? வீட்டு வாசலில் 'ராஜகோபாலாச்சாரி ஒழிக!' என்ற கூச்சலும் பலபேருடைய பொருமைப் பேச்சுகளும் தவிர வேறு என்ன இருந்தது? இப்பேர்ப்பட்ட பதவியிலா எனக்கு மோகம்?" என்று கேட்டபோது, சபையோருக்குச் சிரிப்பும் கண்ணீரும் சேர்ந்து வந்தது.

மொத்தத்தில் ராஜாஜியின் 'பதவி மோக'மானது சபையோருக்கு அசாத்தியமான குதூகலத்தை விளைத்ததாகத் தெரிந்தது. அவருடைய ஒன்றேகால் மணி நேரப் பிரசங்கத்தில் அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் சபையோர் ஆமோதித்து ஆரவாரம் செய்தார்கள். பிரசங்கம் முழுவதிலும் ஒரே சிரிப்பும் கோஷமும் கொம்மாளமுமாகவே இருந்தது. இன்றைய தினம் நமது நாடு அடைந்திருக்கும் துர்ப்பாக்கிய நிலைமைகூட ராஜாஜியின் ஒப்பற்ற நகைச்சுவையின் மூலமாகச் சிரித்துக் குதூகலிப்பதற்கு உரியதாகி விடுகிறது!

யாருக்கு......?

உலகத்தில் எத்தனையோ அசட்டுத்தனங்கள் உண்டு. ஆனால் "சர்க்கார் அதிகாரத்தைப் பொது மக்களின் சார்பாகக் கைப்பற்ற வேண்டும்" என்றால், அதைப் "பதவி மோகம்" என்று கூறுகிற அசட்டுத்தனத்துக்கு இணையே கிடையாது. 'சுதந்திரம்' 'சுயராஜ்யம்' என்றால், பதவியில்லாமல் வேறு என்ன? பதவி ஏற்காமல், அதிகாரம் வகிக்காமல், சுயராஜ்யம் எப்படி நடத்துவது? "எங்களுக்குச் சுதந்திரம் வேண்டும்; சுதந்திரம் மட்டுந்தான் வேண்டும்; ஆனால் பதவி, அதிகாரம் ஒன்றும் யாருக்கும் தரக்கூடாது" என்று கேட்பது அசட்டுத்தனத்தின் எல்லை யல்லவா?

ஆறு வருஷத்துக்கு முன்னால் காங்கிரஸ்வாதிகள் இரண்டு வருஷம் மந்திரி உத்தியோகம் பார்த்தார்களே? அது பதவி மோகமா?

பதவி கூடாது, அதிகாரம் கூடாது என்றால் எப்போதும் ஏழைகளும் பாமரர்களும் இங்கிலீஷ்காரர்களின் ஆட்சியில் பயந்து நடுங்கிக் கொண்டிருக்க வேண்டியதுதான்!

"பதவி மோகம்" என்று குற்றம் சொல்கிற பிரகிருதிகளுக்குத்தான் உண்மையில் உள்ளத்திற்குள் பதவி மோகம் இருக்க வேண்டும். 'பதவி' என்ற வார்த்தையிலேயே அவர்களுக்கு அசாத்திய மோகம் ஏற்பட்டிருக்கிறது. அந்த மோகம் அவர்கள் உள்ளத்தில் அவ்வளவு நிறைந்திருப்பதால் "சர்க்காரைக் கைப்பற்றுதல்" "அதிகாரத்தைப் பிடித்தல்" என்பதெல்லாம் மனதிற்குள் பிரவேசிப்பதற்கே இடமில்லாதிருக்கிறது.

நமது பாக்கியம்

மேற்படி கூட்டத்தில் ராஜாஜிக்கு முன்னால் பேசியவர்களில் அக்கிராசனர் ஸ்ரீ வேதரத்தினமும், ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையும் அரசியல் முறையில் மாறுதல் செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்கள். மகாத்மாவின் நிர்மாண திட்டத்தில் பூரண நம்பிக்கை கொண்டு அதை வாழ்க்கையில் பரிபூரணமாக நிறைவேற்றி வைப்பவர்களில் ஸர்தார் வே. வேதரத்தினத்தை மிஞ்சியவர்கள் தமிழ்நாட்டில் யாரும் இல்லை. அத்தகையவர், "மகாத்மாவின் நிர்மாண திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே சர்க்கார் அதிகாரத்தை நாம் கைக் கொள்ள வேண்டும்!" என்று வற்புறுத்தினார். காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது மாகாணத்தில் ஐந்தில் ஒரு பங்கு பிரதேசத்தில் மது விலக்கு நிறைவேற்றியதையும், இப்போது மது வருமானம் பத்து கோடியாய்ப் பெருகியிருப்பதையும் நினைவூட்டினார். "ராஜாஜியைப் போன்ற தலைவர் கிடைத்திருப்பது நமது பாக்கியம். அவருடைய மிஞ்சியுள்ள வாழ்க்கையில் ஒரு நிமிஷமாவது வீண் போகாமல் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!" என்றார்.

ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையோ இன்னும் காரசாரமாகவும் அழுத்தந் திருத்தமாகவும் பேசினார். "ராஜாஜியின் பேச்சை அப்போது புறக்கணித்தவர்களில் நானும் ஒருவன். அது எவ்வளவு பெரிய தப்பு என்பது இப்போது தெரிந்தது. அவர்தான் நமது தலைவர். அவர் இல்லாமல் நமக்குக் கதிமோட்சமில்லை" என்று வெகு உருக்கமாய்ப் பேசி அந்தப் பெரிய சபையின் ஆமோதிப்பைப் பரிபூரணமாகப் பெற்றார்.

அவனைப் பாருங்கள்!

அரசியல் முறையை அடிக்கடி மாற்றத்தான் வேண்டும் என்பதற்கு ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை கூறிய ஒரு உதாரணம் எல்லாருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்தது. "இங்கிலீஷ்காரனைப் பாருங்கள்! அவன் என்ன செய்கிறான்? இன்றைக்கு மகாத்மா காந்தியுடன் சமரசம் பேசி, சரிசமானமாக உடன்படிக்கை செய்து கொள்கிறான். மறுநாளைக்கு அதே மகாத்மாவைச் சிறையில் தள்ளுகிறான். அப்பேர்ப்பட்டவனுடைய சிண்டைப் பிடித்துக் குலுக்கி நமது சுதந்திரத்தைப் பெற வேண்டுமானால் நாமும் நமது முறையை மாற்றிக் கொள்ளத்தான் வேண்டும்" என்று சொன்னதை கோகலே மண்டபத்தில் நிறைந்து நின்ற அவ்வளவு பேரும் ஆமோதித்ததாகவே தோன்றியது. அப்பேர்ப்பட்ட கரகோஷமும் எழுந்தது.

தெளிவு படுத்தினார்

ஒரு முக்கியமான விஷயத்தை ராஜாஜி அன்றையப் பிரசங்கத்தில் தெளிவு படுத்தினார்.

அதாவது, "சர்க்கார் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்" என்று ராஜாஜி சொல்லும்போது, காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக அவரவர்கள் தான்தோன்றியாகக் காரியம் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. தனித் தனியாகக் கட்சி கட்ட வேண்டும் என்றும் சொல்லவில்லை. "கட்சி கட்ட வேண்டும் என்றால், நான் அப்போதே கட்டியிருக்க மாட்டேனா? எம். என். ராய்கூட ஒரு கட்சி கட்டி விட்டாரே? என்னால் ஒரு கட்சியமைக்க முடிந்திராதா?" என்று ராஜாஜி சுட்டிக் காட்டினார்.

காங்கிரஸின் வேலைத்திட்டத்தை மாற்றியமைத்து, காங்கிரஸ் அமைப்புக்களின் மூலமாக, கட்டுப்பாடு குலையாமல், சர்க்கார் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்பது தான் தமது நோக்கம் என்பதை வற்புறுத்தினார்.

"'காரியக் கமிட்டித் தலைவர்கள் விடுதலைக்கு முன்னால் மந்திரி பதவி ஒப்புக் கொள்ளக் கூடாது!' என்று சிலர் பிரமாதப் பிரசாரம் செய்கிறார்களே? அப்படி ஒப்புக் கொள்ள வேண்டுமென்று யாராவது சொன்னார்களா? இவர்களுடைய மனதில் உண்மையில் 'பதவி மோகம்' இருப்பதினால்தான்

இப்படிப்பட்ட பொருளற்ற பிரசாரம் செய்கிறார்கள்!" என்றார்.

ராஜாஜி 'காங்கிரஸின் விரோதி' என்றோ, 'காங்கிரஸ் கட்டுப்பாட்டைக் குலைக்கப் பார்க்கிறார்' என்பதோ எவ்வளவு அபத்தமென்று இதிலிருந்து தெரிகிறது.

தெரியப்படுத்துங்கள்!

ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை எடுத்துக் காட்டியதுபோல் சென்ற இருபத்தைந்து வருஷத்தில் காங்கிரஸ் வேலைத் திட்டமும் முறையும் எவ்வளவோ மாறுதல்களை அடைந்திருக்கின்றன. குருனுக்கு ஒரே வழி என்று இராமல் அவ்வப்போது சமயோசிதமாக வேலைத் திட்டங்களை மாற்ற வேண்டுமென்பது காங்கிரஸுக்கு விரோதம் ஆகாது. அதை விரோதம் என்று சொல்வதுதான், காங்கிரஸின் ஜனநாயக அடிப்படைக்கு விரோதம்.


சர்க்கார் அதிகாரத்தைக் காங்கிரஸ் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் ராஜாஜியின் கட்சி. அதற்குப் பொது ஜனங்கள் ஆதரவு தர வேண்டும் என்று அவர் கூறுகிறார். பொது ஜன அபிப்பிராயம் இது விஷயத்தில் தெளிவாகத் தெரிந்து விட்டால், அப்புறம் எப்போது, எந்த முறையில், என்ன நிபந்தனையின் மேல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதெல்லாம் தலைவர்கள் யோசித்து முடிவு செய்ய வேண்டிய விஷயங்கள்.

ஜனங்களுடைய விருப்பம் என்ன, கஷ்டங்கள் என்ன என்பதை மகாத்மாவுக்குத் தெரியப்படுத்துவதில் யாதொரு தவறுமில்லை. அதனால் நமது மதிப்புக்கோ ஸ்தானத்துக்கோ பங்கம் வரும் என்று பயப்படுவது பிசகாகும்.

"அரசியல் முறையை மாற்ற வேண்டும்; அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்" என்னும் அபிப்பிராயம் பொது ஜனங்களுக்கு இருப்பதை மகாத்மாவுக்குத் தெரிவித்து விட வேண்டுமென்றுதான் ராஜாஜி இப்போது கோருகிறார். அதற்கு மேல் எப்படி அதை நிறைவேற்றுவதென்பது மகாத்மாவையும் மற்றத் தலைவர்களையும் பொறுத்த விஷயம். தேசத்தின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும் முறையில் நமது தலைவர்கள் காரியம் செய்து விடுவார்கள் என்று நாம் ஏன் பயப்பட வேண்டும்?

நிகழ்ச்சிச் சித்திரம்

-உர்மன்



தொலைந்தார் சர்ச்சில்!

பார்த்தீர்களா கடைசியில்! இது என்ன அதிசயம்?

இந்தியாவின் பரம விரோதி—காந்தியைத் தூஷித்த கர்வி—ஏகாதிபத்திய வெறியர் சர்ச்சில்—கடைசியில் ராஜிநாமா செய்து விட்டாராமே?

தொலைந்தாரா மனுஷர்? போய் விட்டாரா புண்ணியவான்! போயே போய்விட்டாரா? ஒழிந்தே ஒழிந்து விட்டாரா?

இந்த அதிசயம் எப்படி நடந்தது? வேவல் செய்த வேலையா இது? "இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்காத லோபியே! நீ தொலைந்து போ!" என்று வேவல் பிரபு சர்ச்சிலை விரட்டி விட்டாரா? பிரதம மந்திரி பதவியிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளி விட்டாரா?

அல்லது இந்தியாவிலே நாமெல்லாம், "சர்ச்சில் போனாலன்றி இந்தியாவுக்குக் கதி மோக்ஷமில்லை" என்று ஆயிரம் மேடைகளில் கர்ஜித்தோமே? பதினாயிரம் பத்திரிகைகளில் எழுதினோமே? இவற்றினால் பயந்து நடுங்கி ஓடிவிட்டாரா?

இப்படியெல்லாம், சென்ற வாரத்தில் ஒருநாள் தினசரிப் பத்திரிகைகளில் "சர்ச்சில் ராஜிநாமா" என்ற பெரிய கொட்டை எழுத்துத் தலைப்பைப் பார்த்ததும் நமக்குத் தோன்றியது. வியந்தோம்; மகிழ்ந்தோம்; உள்ளந் துள்ளிற்று; சிந்தை குதூகலித்தது; இன்னும் என்னவெல்லாமோ செய்தது.

வியப்பு, பரபரப்பு, குதூகலிப்பு எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு கீழே பார்த்தோம்.

பார்த்தால், "பூ! இவ்வளவுதானா?" என்று போய்விட்டது.

அந்தப் பொல்லாத சர்ச்சில் மறுபடியும் ஏமாற்றி விட்டார். இது நிஜ ராஜிநாமா அல்ல; காரியார்த்தமான ராஜிநாமா. அதாவது யுத்த கால சர்ச்சில் சர்க்காரில் இது வரையில் இருந்து ஒத்துழைத்த தொழிலாளர் தலைவர்களை அப்புறப்படுத்துவதற்கான சூழ்ச்சி.

சர்ச்சில் ராஜிநாமா செய்தார்; மற்ற மந்திரிகளும் ராஜிநாமா செய்தார்கள். (அமெரி உள்படத்தான்.)

உடனே, தட்சணமே, மறுபடியும் சர்ச்சில் பிரதம மந்திரியானார். கலப்பற்ற கன்ஸர்வேடிவ் பிற்போக்காளர்களைக் கொண்ட புதிய மந்திரி சபையை அமைத்தார்.

ஆமாம்; மன்னன் அமெரியும் புது மந்திரி சபையில் இருக்கத்தான் இருக்கிறார். யார் எந்த ஸ்தானத்திலிருந்து மாறினாலும் கர்னல் அமெரி மட்டும் இந்தியா மந்திரி ஸ்தானத்திலிருந்து மாறாமல் அசையாப் பிள்ளையாக வீற்றிருக்கிறார்!

ஆகவே, விஷயம் என்னவென்றால், இந்தச் சர்ச்சில் ராஜிநாமாவானது நிஜமான ராஜிநாமா அல்ல; இந்தியாவுக்கு எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டதல்ல; இங்கிலாந்தின் உள்நாட்டு அரசியலைப் பொறுத்த விஷயம்; பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தின் இராஜதந்திரச் சூழ்ச்சி.

ஐரோப்பிய யுத்தத்தில் ஜெர்மனியை முறியடித்து மாபெரும் வெற்றி பெற்றிருக்கும் சமயத்தில், ஜனங்களின் வெற்றி வெறியையும் சர்ச்சிலின் செல்வாக்கையும் தங்களுடைய கட்சி பலத்துக்காக உபயோகப்படுத்திக் கொள்ள பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ்கள் தீர்மானித்தார்கள். இதற்காகத்தான் சர்ச்சிலை ராஜிநாமா செய்யப் பண்ணினார்கள். இதற்காகத்தான் இத்தனை நாளும் ஒத்துழைத்த தொழிலாளர் தலைவர்களை — அட்லி, பெவின் முதலியவர்களை — அப்புறப்படுத்தி, சுத்த கன்ஸர்வேடிவ் மந்திரி சபையைத் தாற்காலிக சர்க்காராக அமைத்திருக்கிறார்கள்.

மேற்படி சூழ்ச்சி நோக்கத்துடனேயே, வருகிற ஜூலை மாதம் 5உ இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தொழிலாளர் தலைவர்கள் இந்தத் தேர்தலை இப்போது கோரவில்லை. "இவ்வளவு அவசரம் ஏன்? கொஞ்சம் தள்ளிப் போட்டு ஆர அமரச் செய்யலாம்!" என்றார்கள். அதைக் கேட்காமல், "இப்பொழுதே தேர்தல் நடத்தித் தீர வேண்டும்" என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இருதரப்பிலும் பலமான தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி அதி தீவிரமாக நடந்து வருகிறது.

பொதுத் தேர்தலின் முடிவு என்ன ஆகும்?

என்ன ஆனால் தேவலை?

இரண்டாவது கேள்விக்குச் சுலபமாகப் பதில் சொல்லி விடலாம்.

தொழிற்கட்சி ஜயித்தால், உலகத்துக்கு நன்மை; இங்கிலாந்துக்கு நன்மை; ஏன், இந்தியாவுக்கும் அதனால் கொஞ்சம் நன்மை இல்லாமற் போகாது.

உலகத்துக்கு என்ன நன்மை என்றால், இங்கிலாந்தில் தொழிற்கட்சி சர்க்கார் ஏற்பட்டால் ருஷியாவோடு அதிக சிநேகப்பான்மை கொள்வார்கள். சர்வதேசிய விவகாரங்கள் சுமுகப்பான்மையுடன் நடைபெறும்.

இங்கிலாந்துக்கு என்ன நன்மை என்றால், தொழிற்கட்சி சர்க்கார் ஏற்பட்டால் இங்கிலீஷ் பொது மக்கள் — முக்கியமாக ஏழைகள், தொழிலாளிகள் — இவர்களுடைய நன்மைகள் அதிகமாகக் கவனிக்கப்படும். அதாவது இங்கிலாந்து மக்களில் பெரும்பான்மையோருக்கு அநுகூலமான அரசாங்கமாயிருக்கும்.

இந்தியாவுக்கு என்ன நன்மை என்று கேட்டாலோ, நல்லது!

“சாம்ராஜ்யத்தைக் கலைப்பதற்காக நான் பிரதம மந்திரியாகவில்லை!” என்றும், “அட்லாண்டிக் சாஸனம் இந்தியாவுக்கு இல்லை!” என்றும், “கறுப்பு மனிதர்களுக்குச் சுதந்திரம் என்ன கேடு?” என்றும் சொல்கிறவர்களைக் காட்டிலும், “இந்தியர்களும் மனிதர்கள்தான்!” “இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்க வேண்டியதுதான்!” “இன்றைக்காவது நாளைக்காவது கொடுக்கத்தான் போகிறோம்!” என்று சொல்கிறவர்கள் எப்படியும் மேல் அல்லவா?

முதல் கூட்டத்தோடு மல்லுக்கு நிற்பதைக் காட்டிலும் இரண்டாவது கூட்டத்தாருடன் ராஜி பேசி முடிவு செய்வது எவ்வளவு சுலபம் அல்லவா?

• • •

“சரி, தொழிற்கட்சி ஜயித்தால் தேவலை; — ஆனால், ஜயிப்பார்களா?” என்று கேட்டால், துரதிர்ஷ்டவசமாக நம்மால் நல்ல பதிலைச் சொல்ல முடியாமலிருக்கிறது.

இங்கிலாந்திலுள்ள கன்ஸர்வேடிவ் கூட்டத்தார் இருக்கிறார்களே, அவர்கள் இந்த உலகத்திலுள்ளேயே இராஜதந்திரத்தில் தலை சிறந்த நிபுணர்கள் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

சென்ற ஐந்நூறு வருஷ காலமாக, வாழையடி வாழையாக, பரம்பரையாக, இராஜ்யமாளும் வித்தைகளையும் சாம்ராஜ்ய மாளும் தந்திரங்களையும் அவர்கள் கையாண்டு தேர்ச்சியடைந்தவர்கள்.

பதினைந்து வருஷத்துக்கு முன்னால் தொழிற்கட்சிக்காரர்கள் போதிய பலம் இன்றியே மந்திரி சபை அமைக்கச் செய்து விட்டு, ஒன்பது மாதத்தில் அதைக் கவிழ்த்தவர்கள்.

பெயர் பெற்ற ‘ஸினோவிவ்’ * கடிதத்தைச் சிருஷ்டி செய்து, பத்திரிகைகளில் அதை வெளியிட்டு, தொழிற்கட்சிக்குக் கெட்ட பெயரை உண்டாக்கி, தேர்தலில் தோற்கடித்து, வெகு காலம் தலையெடுக்க முடியாமல் செய்தவர்கள்.

• • •

பிரிட்டிஷ் ஆளும் வகுப்பாரின் இராஜதந்திரத்துக்கு இன்னும் ஒரு உதாரணம் பார்ப்போம்.

யுத்த ஆரம்பத்தில் பிரிட்டிஷ் நிலைமை மிக நெருக்கடியாயிருந்தபோது, ஒரு வேளை ஜெர்மனியும் ருஷியாவும் ஒன்று சேர்ந்து விடுமோ என்ற பீதி ஏற்பட்டிருந்தபோது, ருஷியாவின் நண்பர் என்று பெயர் பெற்றிருந்த ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸை ருஷியாவுக்கு விசேஷத் தூதராக அனுப்பினார்கள்.

ருஷியாவுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை மூண்டதும் அவரைத் திருப்பிக் கூப்பிட்டார்கள்.

கிரிப்ஸ் ருஷியாவிலிருந்து திரும்பி வரும்போது பிரமாதமான பெயரும் புகழுமாய்த் திரும்பி வந்தார்.

அந்தப் பெயரையும் புகழையும் தொலைத்து விட வேண்டுமென்று பிரிட்டிஷ் ஆளும் கூட்டம் தீர்மானித்தது.

“இந்தியாவுக்குப் போய்ச் சமரசம் செய்து கொண்டு வா!” என்று அனுப்பினார்கள்.

அவ்விதம் கிரிப்ஸை இந்தியாவுக்குத் தூது அனுப்பியதில் பிரிட்டிஷ் ஆளும் இனத்தார் இரண்டு பெரிய காரியங்களைச் சாதித்தார்கள்.

கிரிப்ஸின் செல்வாக்கைப் பூஜ்யம் ஆக்கினார்கள்.

---

* ஸினோவிவ் என்பவர் அந்தக் காலத்து ருஷிய ஸோவியத் அரசாங்கத்தில் பிரபல ஸ்தானம் வகித்தவர். அவருடன் பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் சதியாலோசனை செய்ததாகத் தோன்றும்படி ஒரு கடிதம் ‘போர்ஜரி’ செய்து வெளியிடப் பட்டது.

இந்தியக் காங்கிரஸையும் தற்போதைக்குத் தீர்த்துக் கட்டினார்கள்.

*　　　*　　　*

பிரிட்டிஷ் ஆளும் இனத்தின் இராஜ தந்திரச் சூழ்ச்சிக்கு இன்னும் ஒரே ஒரு உதாரணம் சொல்கிறோம். அது இப்போது நடக்கும் காரியம்.

லண்டனில் இன்றளவும் பழைய போலிஷ் மந்திரிகளை — போலி மந்திரிகளை — வைத்துக் கொண்டும், அவர்களுக்காகப் பணம் செலவழித்துக் கொண்டும், அவர்களுக்குப் பிரசாரம் செய்யப் பத்திரிகை சாதனங்கள், ரேடியோ சாதனங்கள் எல்லாம் கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்களே, எதற்காக?

உண்மையில், இந்தப் போலிஷ் மந்திரிகள் மறுபடியும் போலந்துக்குப் போய் அரசாளப் போகிறார்கள் என்றும், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கப் போகிறார்கள் என்றும் இவர்களுக்கு நம்பிக்கை உண்டா?

ஒரு நாளும் இல்லை.

சர்வ தேசிய விவகாரங்களில் ருஷியாவின் செல்வாக்கு மிஞ்ச விடாமல் பார்த்துக் கொள்வதற்காகவே இந்தப் போலிக் கூட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சாம்ராஜ்யப் பிரசாரத்துக்கு ஒரு சாதனமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

"இந்தியாவுக்கு ஏன் சுதந்திரம் கொடுக்கவில்லை?" "பர்மாவை ஏன் அடக்கி வைத்திருக்கிறீர்கள்?" என்று ருஷியா கேட்பதற்கு முன்னாலேயே, அந்தக் கேள்விக்குப் பலனில்லாமல் செய்வதற்காக, "போலந்தில் ருஷியாவின் அக்கிரமம்!" "ஆஸ்திரியாவில் சோவியத் யதேச்சாதிகாரம்!" முதலிய கூச்சல்களை லண்டனிலிருந்து கிளப்பி விடுகிறார்கள்.

பிரிட்டிஷ் இராஜ தந்திரம் இத்தகையது! பிரிட்டிஷ் ஆளும் இனத்தாரின் மூளைப்போக்கே இத்தகையது!

இப்பேர்ப்பட்டவர்கள் பொதுத் தேர்தல் நடத்தத் தீர்மானித்திருக்கிறார்கள் என்றால், சமய சந்தர்ப்பங்களை நன்றாய்த் தெரிந்து கொண்டுதான் தீர்மானித்திருப்பார்கள்.

வெற்றி வெறியால் மூழ்கியிருக்கும் பிரிட்டிஷ் ஜனங்களைப் பத்திரிகைப் பிரசாரத்தினால் கலக்கித் தங்கள் கட்சியைப் பலமாக ஸ்தாபித்துக் கொள்ள இதுதான் தக்க சமயமென்று யோசித்துத்தான் முடிவு செய்திருப்பார்கள்.

தப்பித் தவறி ஒரு வேளை ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்தினால் தொழிற் கட்சியினர் ஜயித்து விடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அவர்கள் இந்தியா விஷயத்தில் அசட்டுப் பிசட்டு என்று ஏதேனும் காரியம் செய்து விட்டால் என்ன செய்கிறது?

பிரிட்டிஷ் அரசாங்கம் தொழிற் கட்சியாரிடம் மாறினால் மறுபடியும் பிடித்துக் கொள்ளலாம். ஆனால் இந்தியாவைக் கைநழுவ விட்டு விட்டால், அப்புறம் திரும்பக் கிடைப்பது துர்லபமல்லவா?

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சிறப்புக்களுக்கே உயிர் நிலையாயிருப்பது இந்தியா. அப்பேர்ப்பட்ட இந்தியா விஷயத்தைத் தொழிற் கட்சியினர் 'குளறுபடிகேஷன்' செய்வதற்கு இடங் கொடுத்து விடலாமா?

கூடவே கூடாது! இந்தியா விஷயத்தைத் தேர்தல் பிரசாரத்துக்கு உபயோகப்படுத்துவதற்கும் இடங் கொடுக்கக் கூடாது. ஆகையால், இந்தனை நாளும் ஊறப்போட்டு வைத்திருந்த இந்தியப் பிரச்னையை வெளியில் எடுக்க வேண்டியதுதான்.

வெளியில் எடுத்து, "இதோ இந்திய அரசியல் பிரச்னையைத் தீர்க்க வழி" என்று ஏதேனும் ஒரு திட்டத்தை வெளியிட வேண்டியதுதான்.

அதை ஒப்புக் கொள்வதா, நிராகரிப்பதா என்ற தர்மசங்கடப் பிரச்னையை இந்தியத் தலைவர்கள் தலையிலே போட வேண்டியதுதான்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சியாரின் நிலைமையையும் தர்ம சங்கடமாக்க வேண்டியதுதான்.

மேற்கண்டவாறு பிரிட்டிஷ் ஆளும் வகுப்பார் தீர்மானித்திருக்கிறார்கள் என்று கடைசியாக வந்திருக்கும் செய்திகளினால் அறிகிறோம்.

*　　　*　　　*

இவ்வளவு பொல்லாத இராஜ தந்திர நிபுணர்களுடன் போராடி இந்தியா சுதந்திரம் பெறவேண்டியதாயிருக்கிறது என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

அவர்களுடைய இராஜ தந்திரத்தை நம்முடைய இராஜ தந்திரத்தினாலும், அவர்களுடைய சூழ்ச்சியை நமது அறிவுத் திறனாலும் நாம் எதிர்க்கத் தயாராயிருக்க வேண்டும்.

அத்தகைய இராஜ தந்திரமும் அறிவுத் திறனும் படைத்த தலைவர் ஒருவரையேனும் தற்சமயம் இந் நாட்டுக்கு அளித்திருப்பதின் பொருட்டுக் கடவுளின் பேரருளை வாழ்த்துகிறோம்.

சென்ற இதழில் வெளியான காலேஜ்த் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: வி. சௌந்திரராஜன், 205, வாணியர் தெரு, நன்னிலம்.

சிவகாமியின் சபதம்



கல்கி

அத்தியாயம் 21

கோபாக்னி

ஆயனரையும் சிவகாமியையும் வாதாபி வீரர்கள் எதிர்ப்பட நேர்ந்தது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வதற்கு நாம் சிறிது பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

காஞ்சி நகரின் வடக்குக் கோட்டை வாசலில் மகேந்திர பல்லவரிடம் விடை பெற்றுக் கொண்டு பிரிந்த போது வாதாபி சக்கரவர்த்தி புலிகேசியின் மனோநிலை எப்படியிருந்தது என்பதை ஒருவாறு நாம் தெரிந்து கொண்டோம்.

கரும் புகையும் தீக் குழம்பும் அக்கினி ஜுவாலையும் குமுறிக் கொண்டு எப்போது வெளிக் கிளம்பலாம் என்று வழி பார்த்துக் கொண்டிருக்கும் நெருப்பு மலையின் கர்ப்பத்தைப் போல் இருந்தது அவருடைய உள்ளம்.

அவ்வளவு பொறாமையும் கோபமும் ஆவேசமும் அவருடைய உள்ளத்தில் குமுறி வெளி வருவதற்காகத் தத்தளித்துக் கொண்டிருந்தன.

காஞ்சிமா நகரின் மணிமாட மண்டபங்களும், அந்நகர மக்களின் செல்வமும் சிறப்பும், காஞ்சி அரண்மனையின் மகத்தான ஐசுவரியமும், அங்கு அவர் கண்ட காட்சிகளும் வைபவங்களும் அளவற்ற பொறாமைத் தீயை அவர் உள்ளத்தில் மூட்டின.

அந்தப் பொறாமைத் தீயை வளர்க்கும் காற்றாக ஏற்பட்டது கடைசியாக நடந்த சிவகாமியின் நடனம். அன்று அந்த நடனத்தின்போது மகேந்திர பல்லவர் கலைச் செருக்குடன் கூறிய மொழிகள் கலை உணர்வு இல்லாத புலிகேசியின் உள்ளத்தில் பெருந் துவேஷத்தை உண்டாக்கின.

எல்லாவற்றுக்கும் மேலாக, புலிகேசியின் மனதில் கோபம் குமுறி எழும்படி செய்த விஷயம், மகேந்திர பல்லவர் தம்மை நெடுகிலும் ஏமாற்றி வந்திருக்கிறார் என்ற உணர்ச்சியேயாகும். வட பெண்ணைக் கரையில் தம் முன்னிலையில் அவர் தன்னந் தனியாக வந்து நின்று, பொய் ஓலையைக் கொடுத்து ஏமாற்றி விட்டல்லவா போய் விட்டார்? அதற்குப் பிறகு நெடுகிலும் எத்தனை ஏமாற்றங்கள்? எத்தனை தந்திர மந்திரங்கள்?

நியாயமாக இந்தக் காஞ்சிமா நகரம் இதற்குள்ளே தமது காலடியில் விழுந்து கிடக்க வேண்டும். ஐசுவரிய கர்வமும் கலைக் கர்வமும் கொண்ட காஞ்சி மக்கள் தம் முன்னிலையில் நடு நடுங்கிக் கொண்டு உயிர்ப் பிச்சை கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆ! இந்த மகேந்திர பல்லவனுடைய மணி முடியைத் தமது காலால் உதைத்துத் தள்ளியிருக்கவேண்டும்!

ஒன்றரை வருஷத்துக்கு முன்னால் வட பெண்ணைக் கரையில் நின்றிராமல் நேரே முன்னோக்கி வந்திருந்தால்.

இதெல்லாம் சாத்தியமாகி யிருக்கும். இப்போது காஞ்சியிலும் உறையூரிலும் மதுரையிலும்கூட வராகக்கொடி கம்பீரமாய்ப் பறந்து கொண்டிருக்கும்.

இதெல்லாம் நடக்காமற் போய் விட்டதன் காரணம் என்ன? — எல்லாம் மகேந்திர பல்லவனுடைய மாய தந்திரங்களினால் தான்; பொய்ப் புனை சுருட்டுகளினால் தான்.

வன மிருகங்களை யெல்லாம் கதி கலங்கச் செய்யக்கூடிய வீரப் புலியைக் கேவலம் ஒரு நரி, — வளையில் பதுங்கி வாழும் நரி, — தந்திரத்தினால் வென்று விட்டது!

இதை நினைக்க நினைக்க, வாதாபி சக்கரவர்த்திக்குக் கோபம் மேலும் மேலும் பொங்கிக் கொண்டு வந்தது. அவருடைய நெற்றியின் நரம்புகள் ஒவ்வொன்றும் புடைத்துக் கொண்டு நின்றன. அவருடைய முகத்தைப் பார்த்தவர்கள், என்ன விபரீதம் வரப் போகிறதோ என்று அஞ்சி நடுங்கினார்கள்.

காஞ்சி நகரிலிருந்து வெளியேறியது முதல் அந் நகருக்கு வடக்கே ஒரு காத தூரத்தில் சளுக்கர் பெரும் சைன்யம் தண்டு இறங்கி யிருந்த இடத்துக்குப் போய்ச் சேரும் வரையில வாதாபி சக்கரவர்த்தி வாய் திறந்து பேசவில்லை. இயற்கைக்கு மாறான இந்த விபரீத அமைதியானது அவருடன் சென்றவர்களுக் கெல்லாம் பீதியை ஊட்டியது.

சக்கரவர்த்தி தமது கூடாரத்தை அடைந்ததும், எரிமலையானது நெருப்பைக் கக்க ஆரம்பித்தது.

வாதாபியின் படைத் தலைவர்களும், பண்டகசாலைத் தலைவர்களும், ஒற்றர் படைத் தலைவர்களும் புலிகேசியின் கோபாக்கினியில் எரிந்து பொசுங்கினார்கள்.

*   *   *

தளபதிகள் முதலியோர் மந்திராலோசனைக்காக வந்து கூடியதும், "உங்களில் பாதிப் பேரை யானையின் காலால் இடறச் செய்யப் போகிறேன்; மிச்சப் பாதிப் பேரைக் கழுவிலே ஏற்றப் போகிறேன்!" என்ற சந்தோஷமான செய்தியுடன் புலிகேசி ஆரம்பித்தார்.

அதைக் கேட்டு மௌனமாயிருந்த சபையினரைப் பார்த்து, "ஏன் சும்மா இருக்கிறீர்கள்? எல்லாருக்கும் வாய் அடைத்துப் போய்விட்டதா?" என்று கர்ஜித்தார்.

பின்னர், அவர்கள் மீது சரமாரியாக வசை பாணங்களைப் பொழிந்தார். தென்னாட்டுப் படையெடுப்பில் நாளது வரையில் நேர்ந்த முட்டுக் கட்டைகள், தோல்விகள், ஏமாற்றங்கள் எல்லாவற்றுக்கும் அவர்கள் தான் காரணம் என்று குற்றம் சாட்டினார்.

"வீரம் மிகுந்த படைத் தலைவர்களே! புத்தியிற் சிறந்த ஒற்றர்களே! கேளுங்கள்! இந்தக் காஞ்சி நகரின் கோட்டை வாசல்களுக்கு ஒரு சமயம் வெறும் ஒற்றை மரக் கதவு போட்டிருந்தது. அப்போது நாம் வந்திருந்தால் நம்முடைய யானைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோட்டை வாசலைத் திறந்து விட்டிருக்கும். இந்தக் கோட்டை மதிலைக் காக்க அப்போது பத்தாயிரம் வீரர்கள் கூட இல்லை. நமது வீரர்கள் ஒரே நாளில் அகழியைக் கடந்து மதிலைத் தாண்டி உள்ளே புகுந்திருக்கலாம். இந்த மகேந்திர பல்லவன் ஓடி வந்து என் காலில் விழுந்திரா விட்டால், ஆ! லங்கா தகனம் செய்திருக்கலாம் லங்கா தகனம்! — அப்படிப் பட்ட காஞ்சி நகரில் என்னை அந்தப் பல்லவன், இல்லாத அவமதிப்புகளுக் கெல்லாம் உள்ளாக்கினான். ஆ! ஒரு கல் தச்சனுக்கும் ஒரு கூத்தாடிப் பெண்ணுக்கும் முன்னால் என்னை அவமானப்படுத்தினான்! ஆஹா! எனக்குக் கலை தெரியாதாம்! ரஸிகத் தன்மை இல்லையாம்! என்ன கர்வம்! என்ன அகம்பாவம்!" என்று கூறிப் பற்களை நறநறவென்று கடித்துத் தரையில் காலால உதைத்தார புலிகேசி மகாராஜா.

பிறகு, "மகேந்திர பல்லவன் இந்தக் காஞ்சிக் கோட்டையைப் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கொண்டிருந்தபோது, நீங்கள் வட பெண்ணைக் கரையில் சாவகாசமாகத் தூங்கிக் கொண்டிருந்தீர்கள்! எப்படியிருக்கிறது கதை!" என்று கூறிப் பயங்கரத் தொனியுடன் சிரித்தார.

அப்போது வாதாபி ஒற்றர் படைத் தலைவன் சிறிது தைரியம் கொண்டு, "பிரபு! எல்லாம் நாகநந்தியின் ஓலையால் வந்த வினை. அப்போதே நான் ஆட்சேபித்தேன்!" என்றான்.

புலிகேசி கண்ணில் தீப்பொறி பறக்க அவனைப் பார்த்துச் சொன்னார்:- "நிர்மூடா! உன்னுடைய மூட்டாள்தனத்துக்கு நாகநந்திமேல் பழி போடப் பார்க்கிறாயா? நாகநந்தி ஒருநாளும் தப்பான யோசனை கூறியிருக்க மாட்டார். நமக்கு வந்த ஓலை நாகநந்தியின் ஓலை அல்ல நாகநந்தியின் ஓலையை இந்தத் திருடன் மகேந்திரன் நடுவழியில் திருடிக் கொண்டுவிட்டான். அதுமட்டுமா? வேறு பொய் ஓலை எழுதிக் கொண்டு இவனை யாறு வேடத்தில் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான். நமது புத்திசாலிகளான ஒற்றர்களால் இதையெல்லாம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆஹா!...... நாகநந்தி மட்டும் அச்சமயம் நம்முடன் இருந்திருந்தால், இப்படியெல்லாம் நடந்திருக்குமா? இந்த மகேந்திர நரியின் தந்திரமெல்லாம் அவரிடம் பலித்திருக்குமா?...... நீங்கள் இவ்வளவு பேர் இருந்து என்ன பயன்? புத்தபிக்ஷு ஒருவர் இல்லாததினால் எல்லாம் நாசமாகி விட்டது!......"

நாகநந்தியைப் பற்றிப் பேச ஆரம்பித்தவுடனே சக்கரவர்த்தியின் உள்ளம் கனிவடைந்து, பேச்சும் கொஞ்சம் நயமாக வந்தது. இதுதான் சமயம் என்று வாதாபி சேனாதிபதி, "பிரபு! போனது போயிற்று! எப்படியோ காரியங்கள் கெட்டுப் போயின. இப்போது நமது சைன்யத்தை வாதாபிக்குப் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதைப் பற்றி யோசிக்க வேண்டும். நாள் ஆக ஆக, நாம் திரும்பிப் போவது கடினமாகி விடும்......" என்று கூறி வந்தபோது, புலிகேசி, இடிமுழக்கம் போன்ற குரலில், "சேனாபதி! என்ன சொன்னீர்? திரும்பிப் போகிறதா?" என்று கர்ஜனை செய்தார்.

உடனே மறுபடியும் கனிந்த குரலில், "தளபதிகளே! கேளுங்கள்! நாகநந்தியடிகள் இந்தக் காஞ்சிக் கோட்டைக்குள்ளே பல்லவனுடைய சிறைக் கூடத்தில் அடைபட்டுக் கிடக்கிறார். இளம் பிள்ளைப் பிராயத்தில் பெற்ற தாயைப்போல் என்னை எடுத்து வளர்த்துக் காப்பாற்றியவர்: என் உயிரைக் காப்பதற்காகத் தம் உயிரைப் பல தடவை பலி கொடுக்கத் துணிந்தவர்; வாதாபி சிம்மாசனத்தில் என்னை ஏற்றி வைத்தவர்; உத்தராபதத்தின் மகா சக்கரவர்த்தி ஹர்ஷவர்த்தனரை என்னிடம் சமாதானம் கோரித் தூது அனுப்பச் செய்தவர்;— அத்தகைய மகா புருஷர் இன்று இந்தப் பல்லவ நரியின் வளையிலே அடைக்கப்பட்டுக் கிடக்கிறார். அவரை அப்படியே விட்டுவிட்டு நாம் ஊருக்குத் திரும்பிப் போகவேண்டுமென்று சொல்கிறீர்கள். ஒருநாளும் இல்லை. படைத் தலைவர்களே! உடனே புறப்படுங்கள். காஞ்சிக் கோட்டையைத் தாக்கும்படி நமது வீரப் படைகளுக்குக் கட்டளையிடுங்கள். காஞ்சியைப் பிடித்து, மகேந்திர பல்லவனுடைய மாளிகையைச் சுட்டெரித்து, மகேந்திரனுடைய தலையை மொட்டையடித்து நமது தேர்க்காலில் கட்டிக்கொண்டு வாதாபிக்குத் திரும்பிப் போவோம். நாகநந்தியடிகளைச் சிறை மீட்டு அவரை நமது பட்டத்து யானைமீது வைத்து அழைத்துப் போவோம்! உடனே கிளம்புங்கள்!" என்று கூறி நிறுத்தினார். சபையில் சற்று நேரம் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது.

"இது என்ன மௌனம்? ஏன் பேசாதிருக்கிறீர்கள்? பல்லவ நாட்டுக் கற்சிலைகளைப் பார்த்துவிட்டு நீங்களும் கற்சிலைகளாகப் போய்விட்டீர்களா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

பிறகு, தளபதிகள் ஒவ்வொருவராகத் தம் அபிப்பிராயங்களைச் சொல்லலானார்கள்:

யானைப் படைத் தலைவர், யானைகள் எல்லாம் உணவின்றி மெலிந்து விட்டன என்றார், அவற்றின் வெறி அதிகமாகி வருகிறதென்றும், சிலநாள் போனால் யானைகள் கட்டுமீறிக் கிளம்பி நமது வீரர்களையே அழிக்க ஆரம்பித்து விடுமென்றும் கூறினார்.

காலாட் படைத் தலைவர், காஞ்சிக் கோட்டையைத் தாக்கும்படி வீரர்களை

ஏவுதல் இயலாத காரியம் என்றும், அவர்கள் ஏற்கெனவே சோர்வும் அதிருப்தியும் கொண்டு ஊருக்குத் திரும்பிப் போகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், கோட்டையைத் தாக்கச் சொன்னால் ஒருவேளை கலகமாயக் கிளப்பினாலும் கிளம்புவார்கள் என்றும் தெரிவித்தார்.

பண்டகசாலை அதிபதி, இன்னும் சில நாள் போனால் எல்லாரும் பட்டினியினாலேயே செத்துப்போக நேரிடுமென்றார். வாதாபிக்குத் திரும்பிப் போக ஆளே இராதென்றும் கூறினார்.

ஆயுதசாலை அதிபதி, கோட்டையைத் தாக்குவதற்கு வேண்டிய ஆயுதங்கள் இல்லை. கொண்டு வந்தவையெல்லாம் முன் தாக்குதல்களில் நஷ்டமாகிவிட்டன என்றார்.

இதையெல்லாம் கேட்கக் கேட்கப் புலிகேசிக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆயினும், அவ்வளவு பேரும் சேர்ந்து சாத்தியமில்லையென்று சொல்லும்போது அந்த ஒருமுகமான அபிப்பிராயத்துக்கு மாறாகக் கோட்டையைத் தாக்கத்தான் வேண்டுமென்று சொல்லப் புலிகேசிக்குத் துணிச்சல் வரவில்லை.

"ஆஹா! உங்களை நம்பி நான் இந்தப் படையெடுப்பை ஆரம்பித்தேனே? எனக்கு இது வேண்டியதுதான்!" என்று வெறுப்புடன் பேசிவிட்டு, "இருக்கட்டும்; எல்லாரும் போய்த் தொலையுங்கள். இன்றிரவு யோசித்து நாளைக்கு முடிவு சொல்கிறேன்!" என்றார்.

அத்தியாயம் 22

புலிகேசி ஆக்ஞை

அன்றிரவு மட்டுமல்ல; மறுநாளும் அதற்கு மறுநாளும் கூடப் புலிகேசி அவ்விடத்திலேயே இருந்து யோசனை செய்தார். அங்கிருந்து தெற்கே காத தூரத்தில் தெரிந்த காஞ்சிமா நகரின் கோபுரங்களையும் ஸ்தூபங்களையும் பார்க்கப் பார்க்க அவருடைய கோபம் கொந்தளித்தது; பொங்கிற்று. அந்நகரின் காராக்கிருஹம் ஒன்றில் நாகநந்தி அடிகள் சிறைப்பட்டுக் கிடக்கிறார் என்பதை நினைத்தபோது அவருடைய கோபத் தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோலிருந்தது. மகேந்திர பல்லவன்மேல் எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்னும் எண்ணம் நிமிஷத்திற்கு நிமிஷம் வளர்ந்து சீக்கிரத்தில் வானத்தையும் பூமியையும் அளாவி நின்றது.

இரண்டு தினங்கள் இரவு பகலாக யோசனை செய்து கடைசியில் வாதாபிச் சக்கரவர்த்தி சில முடிவுகளுக்கு வந்தார். தமது தளபதிகளையும் பிரதானிகளையும் அழைத்து அம்முடிவுகளை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அந்த முடிவுகள் இவைதான்:

சக்கரவர்த்தியும் முக்கிய தளபதிகளும் சைன்யத்தில் பெரும் பகுதியுடன் வாதாபிக்கு உடனே புறப்பட வேண்டியது.

சைன்யத்தில் நல்ல தேகக்கட்டு வாய்ந்த வீரர்களாக ஐம்பதினாயிரம் பேரைப் பின்னால் நிறுத்தவேண்டியது. அவர்கள் தனித் தனிக் கூட்டமாகப் பிரிந்து காஞ்சி நகரைச் சுற்றிலும் நாலு காத தூரம் வரை உள்ள கிராமங்கள், பட்டணங்களை எல்லாம் சூறையாடிக் கொளுத்தி அழித்துவிட வேண்டியது. அங்கங்கே கிராமங்களிலுள்ள யௌவன ஸ்திரீகளை எல்லாம் சிறை பிடித்துக்கொண்டு, வாலிபர்களை எல்லாம் கொன்று, வயதானவர்களை எல்லாம் அங்கஹீனம் செய்து இன்னும் எவ்வெவ்விதமாக எல்லாம் பழி வாங்கலாமோ அவ்விதமெல்லாம் செய்ய வேண்டியது. முக்கியமாக, சிற்பங்கள் — சிற்ப மண்டபங்கள் முதலியவற்றைக் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் இடித்துத் தள்ளவேண்டியது. சிற்பிகளை ஒருகாலும் ஒருகையும் வெட்டிப் போட்டுவிட வேண்டியது.

இப்படிப்பட்ட கொடூர பயங்கரமான கட்டளைகளைப் போட்டு அவற்றை நிறைவேற்றுவதற்குத் தக்க பாத்திரங்களையும் நியமித்து ஏவி

விட்டுவிட்டு, வாதாபிச் சக்கரவர்த்தி தமது சைன்யத்தின் பெரும் பகுதியுடன் பிரயாணமானார்.

புலிகேசியின் மேற்கூறிய கொடூர ஆக்ஞையை நிறைவேற்றுவதற்காகக் காஞ்சியைச் சுற்றிப் போய்க்கொண்டிருந்த வாதாபி வீரர் கூட்டம் ஒன்றைத்தான் ஆயனரும் சிவகாமியும் காட்டு வழியில் சந்தித்தார்கள்.

• • •

வராகக் கொடியைப் பார்த்து வாதாபி வீரர்கள் என்று தெரிந்து கொண்டதும் சிவகாமிக்குத் தேகமெல்லாம் நடுங்கிற்று. உள்ளம் பதை பதைத்தது. தலையைச் சுற்ற ஆரம்பித்தது. காலின் கீழிருந்த தரை நழுவுவது போல இருந்தது. எதிர்ப்பட்ட வாதாபி வீரர்கள் கிட்டத்தட்ட நூறு பேர்தான் என்றாலும், சிவகாமியின் கண்களுக்குப் பதினாயிரம் பேராக அவர்கள் காட்சியளித்தார்கள். பல்லைக் கடித்து மனதை உறுதிப்படுத்திக் கொண்டு சிவகாமி மயக்கமடைந்து விழாமல் சமாளித்து நின்றாள்.

ஆனால், ஆயனருக்கோ அம்மாதிரி அச்ச உணர்ச்சி சிறிதும் ஏற்பட



வில்லை. அவருக்கு உற்சாகமே ஏற்பட்டு விட்டதாக முக மலர்ச்சியிலிருந்து தோன்றியது. முன்னால் நின்ற வீரனைப் பார்த்து, "ஐயா, நீங்கள் வாதாபி வீரர்கள்தானே. உங்கள் மகாராஜா எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். அந்த வீரனுடைய முகபாவத்தைப் பார்த்ததும் தமிழ் பாஷை அவர்களுக்குத் தெரிந்திராது என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு அதே விஷயத்தைப் பிராகிருத மொழியில் கேட்டார். அந்த வாதாபி வீரனுக்கு அதுவும் விளங்காமல், அவன் பின்னால் வந்த படைத் தலைவனைத் திரும்பிப் பார்த்தான். இதற்குள் குதிரைமேல் வந்து கொண்டிருந்த படைத் தலைவன் முன்புறத்துக்கு வந்து சேர்ந்தான். ஆயனரையும் சிவகாமியையும் உற்றுப் பார்த்தான். அவன் "ஓஹோ!" என்ற ஒலியால் தனது வியப்பைத் தெரிவித்தான்.

ஏனெனில், புலிகேசியுடன் காஞ்சி நகருக்குள் வந்து, பல்லவ சக்கரவர்த்தியின் சபையில் சிவகாமியின் நடனத்தைப் பார்த்தவர்களிலே இவனும் ஒருவன். எனவே, அவர்களை அடையாளம் தெரிந்து கொண்டதும் அவனுக்கு வியப்பும் குதூகலமும் உண்



டாயின. இன்னும் அவர்கள் அருகில் குதிரையைச் செலுத்திக் கொண்டு வந்து அவர்களை விழித்துப் பார்த்து விட்டு ஆயனரை நோக்கி, "என்ன கேட்கிறீர்?" என்றான். அவனுடைய முகம் ஓரளவு ஆயனருக்கும் பார்த்த முகமாக ஞாபகம் இருந்தது. எனவே முன்னைவிட அதிக உற்சாகத்துடன் "ஐயா! உங்கள் சக்கரவர்த்தி எங்கே இருக்கிறார்? அவரை நான் பார்க்க வேண்டும்" என்றார். தளபதி சசாங்கனின் புருவங்கள் நெரிந்தன. முகத்தில் வேடிக்கைப் புன்னகையுடன், "வாதாபிச் சக்கரவர்த்தியை நீர் எதற்காகப் பார்க்க வேண்டும்? அவரிடம் உமக்கு என்ன காரியம்?" என்றான்.

"காரியத்தைச் சக்கரவர்த்தியிடம் மாத்திரந்தான் சொல்ல வேண்டும். அந்தரங்கமான விஷயம்" என்றார் ஆயனர். அதைக் கேட்டு அவ்வீரன் பரிகாசச் சிரிப்புச் சிரிப்பதைப் பார்த்துவிட்டு, ஒருவேளை விஷயத்தைச் சொல்லாவிட்டால் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் தங்களை அழைத்துப் போக மாட்டார்கள் என்று எண்ணி, "இருந்தாலும், உங்களிடம் சொல்லக் கூடாது என்பதில்லை. அஜந்தா சித்திரங்களின் அழியாத வர்ண இரகசியத்தைப் பற்றி உங்கள் சக்கரவர்த்திக்குத் தெரியுமாமே, அவரிடம் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் வந்தேன். தயவு செய்து என்னைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போவீர்களா?" என்றார்.

இதைக் கேட்டதும் தளபதி சசாங்கன் முன்னைவிட பலமாகச் சிரித்தான். பக்கத்தில் நின்ற வீரர்களைப் பார்த்து, "ஏன் நிற்கிறீர்கள்? இவர்களுடைய கண்ணைக் கட்டுங்கள்" என்றான்.

ஆயனர் திடுக்கிட்ட குரலில், "கண்ணைக் கட்டுவதா? எதற்காக?" என்று வினவினார். அதற்குக் குதிரை மேலிருந்த தளபதி சசாங்கன் "உமக்கு அவசியம் தெரியத்தான் வேண்டுமா? அப்படியானால் சொல்லுகிறேன். இந்தப் பல்லவ நாட்டிலுள்ள யௌவன ஸ்திரீகளை எல்லாம் சிறை பிடித்துக் கொண்டு வரும்படி வாதாபி சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அதோடு, இந்த ராஜ்யத்திலுள்ள சிற்பிகளை எல்லாம் ஒரு காலையும் ஒரு கையையும் வெட்டிப் போடும்படி ஆக்ஞாபித்திருக்கிறார். சாதாரண சிற்பிகளுக்குத்தான் இந்த ஆக்ஞை. நீரோ சிற்பிகளுக்கெல்லாம் குருவான மகா சிற்பி. ஆகையால் உம்முடைய இரண்டு காலையும் இரண்டு கையையும் துணித்து விடப் போகிறேன். அந்தக் காட்சியை இந்தப் பெண் பார்க்க வேண்டாமென்றுதான் கண்ணைக் கட்டச் சொன்னேன்!" என்றான்.

அப்போது அம்பினால் அடிபட்ட குயிலின் கடைசி மரணக் குரலைப் போல வேதனை ததும்பிய ஒரு குரல் 'கீச்' சென்று கேட்டது. சிவகாமி, ஸ்மரணை இழந்து தரையில் விழுந்து உயிரற்ற சவம்போல் கிடந்தாள்.

* * *

சிவகாமிக்கு மறுபடியும் தன்னுணர்வு வந்தபோது தன் தலை இன்னும் சுழன்று கொண்டிருப்பதையும் தன் கால்கள் மட்டும் மெதுவாக நடந்து கொண்டிருப்பதையும், இரு பக்கத்திலும் இருவர் தன் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு நடத்தி வருவதையும் கண்டாள்.

சிறிது சிறிதாக அவளுக்குப் பிரக்ஞை வந்து சற்றுமுன் நடந்த சம்பவங்களும் நினைவுக்கு வந்தன. பக்கத்தில் தன் தந்தை இல்லை என்பதை உணர்ந்தபோது தனது வாழ்நாளில் இதுவரை அநுபவித்திராத இதய வேதனை உண்டாயிற்று. நெஞ்சிலிருந்து ஏதோ மேலே எழும்பித் தொண்டையை வந்து அடைத்துக் கொள்வது போலிருந்தது. பரமை பிடித்த நிலையில் அவள் இவ்வாறு பக்கத்தில் நின்ற வீரர்களால் உந்தப்பட்டு இன்னும் சில அடி தூரம் நடந்து சென்றபோது, அருகில் அடர்ந்த காட்டிற்குள்ளிருந்து திடீரென்று ஓர் உருவம் வெளிப்பட்டதைக் கண்டாள். பார்த்த கணத்திலேயே அந்த உருவம் நாகநந்தி அடிகளின் உருவந்தான் என்பதும் தெரிந்து விட்டது. உடனே ஆவேசம் வந்தவள் போல, தன்னைப் பற்றியிருந்த வீரர்களின் கைகளிலிருந்து திமிறிக்கொண்டு விடுபட்டு நாகநந்தி அடிகளின் முன்னால் பாய்ந்து சென்று அவர் காலடியில் விழுந்து நமஸ்கரித்து, "சுவாமி, காப்பாற்ற வேண்டும்!" என்று கதறினாள்.

ஆடல் பாடல்

கர்நாடகம்

ருஷியா தேசத்திலே — (சரியாய்ப் போச்சு! எதற்கு எடுத்தாலும் ருஷியா தேசந்தானா?) — வேண்டாம், ஐயா! — ஒரே ஒரு பெரிய தேசத்திலே மிகக் கொடுமையான யதேச்சாதிகார அரசாட்சிக்கு எத்தனையோ காலமாக உட்பட்டிருந்த ஜனங்கள் ஒரு நல்ல சமயம் பார்த்துப் புரட்சி செய்யத் தொடங்கினார்கள். பல நாள் கருவமாகச் சிம்மாசனத்திலிருந்த கொடுங்கோல் மன்னனையும் அவனுடைய துர்மந்திரிகளையும் அடியோடு ஒழித்து விட்டுப் புதிய ஜனசமுதாய ஆட்சியை ஏற்படுத்தினார்கள்.

ஆனால் புது ஆட்சி ஏற்பட்டவுடனே தேசத்துக்குச் சுபிட்சம் வந்து விடவில்லை. ஏனெனில், பழைய கொடுங்கோலாட்சி நடந்த சமயத்தில் தேச மக்கள் மிகக் கொடிய தரித்திரத்தில் ஆழ்ந்திருந்தார்கள். புரட்சி நடந்த காலத்தில் தேசத்தில் சொல்ல முடியாத கஷ்டங்கள் ஏற்பட்டுச் சமுதாய வாழ்க்கை சின்னா பின்னமாய்ப் போயிருந்தது. இதோடு, மேற்படி தொழிலாளர் புரட்சியைப் பிடிக்காதவர்களான மற்ற தேசத்து முதலாளிகள் தங்கள் தங்கள் அரசாங்கங்களைத் தூண்டி நாலா புறத்திலும் அந்தத் தேசத்தைத் தாக்கும்படி செய்தார்கள். வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள் முதலியவை போகாதபடியும் செய்தார்கள்.

இத்தியாதி காரணங்களினால், புரட்சி நடந்து மூன்று வருஷத்துக்குப் பிறகு அந்த தேசமானது உலகத்தில் எந்த தேசமும் அதுவரை அடைந்திராத கஷ்டத்தை அடைந்திருந்தது. உள்நாட்டில் கலகங்கள் வெளி நாட்டு அரசாங்கங்களின் தலையீடுகள்; நாடெங்கும் பசியும் பட்டினியும்; குளிரினாலும் டைபாய்டு சுரத்தினாலும் கணக்கற்ற மக்கள் மடிந்தார்கள். அடுப்பெரிக்க ஒரு விறகுக் கட்டை, பசிக்கு ஒரு ரொட்டித் துண்டு, சட்டைக்கு ஒரு பித்தான் — இவை கிடைப்பது தங்கப் புதையல் கிடைப்பது போல் அருமையாயிருந்தது.

இப்பேர்ப்பட்ட அழகான சமயத்திலே தான் அந்தப் பைத்தியக்கார தேசத்தில் புதிதாக ஏற்பட்டிருந்த பைத்தியக்கார சர்க்கார் ஒரு மகா பைத்தியக்கார இயக்கத்தை ஆரம்பித்தார்கள். (அதாவது 'பைத்தியக்கார இயக்கம்' என்று அந்த நாளில் மற்ற நாட்டாரால் கருதப்பட்ட இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.) அதற்குப் 'புதிய பண்பாடு' இயக்கம் என்று பெயரும் கொடுத்தார்கள்.

மேற்படி இயக்கத்திற்காக மேற்படி பொதுஜன சர்க்கார் ஏற்படுத்திய திட்டத்தின் முக்கிய அம்சங்களைக் கேளுங்கள்:—




உப்புக்கும் ஒரு வாய்க் கூழுக்கும் கவிதை ஒப்பித்த ஔவைப்பாட்டி

1. தேசத்தில் படிப்பில்லாதிருந்த ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு புத்தகம் இனாமாகக் கொடுத்தார்கள்.

2. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளி ஒவ்வொருவனும் ஆறு மணி நேரம் வேலை செய்ய வேண்டும், இரண்டு மணி நேரம் படிக்க வேண்டும் என்று சட்டம் செய்தார்கள்.

3. அவ்விதம் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கு உபாத்தியாயர்களையும் ஏற்படுத்தினார்கள்.

4. தேசத்திலே காகிதப் பஞ்சம் எவ்வளவோ இருந்தும், ருஷியாவின் இலக்கியங்களையும் வெளி நாட்டு இலக்கியங்களையும் லட்சக்



"என் பெயர் முனிசாமிங்க: —
ஆனால், சொல்ல மாட்டேனுங்க!"

கணக்கில் அச்சிட்டு நாடெங்கும் விநியோகித்தார்கள்.

5. கண்காட்சிச் சாலைகளையும், புத்தக சாலைகளையும் எல்லா மக்களுக்கும் திறந்து விட்டதுடன், அவற்றுக்கு ஜனங்களை வரும்படி தூண்டப் பற்பல ஏற்பாடுகள் செய்தார்கள்.

6. நாடு முழுவதிலுமுள்ள நாடகசாலைகளை யெல்லாம் திறந்து விட்டு, எல்லா நாடகசாலைகளிலும் நாடகங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

7. மேற் சொன்னதை யெல்லாம் விட முக்கியமாக, உலகம் இதுவரை கண்டிராத அதிசயமாக, ஒரு காரியம் செய்தார்கள். அது என்னவென்றால்:

குழந்தைகளுக்காகத் தனிப்பட்ட நாடக சாலைகளைப் புதிதாக அமைத்ததுதான்!

இந்தக் குழந்தை நாடக சாலைகள் முழுதும் சர்க்கார் செலவிலேயே நடத்தப்பட்டன. இந் நாடக சாலைகளை நடத்துவதற்காக சர்க்கார் ஏராளமாகச் செலவு செய்தார்கள்.

இந்தக் காரியந்தான் அந்த நாளில் 'பைத்தியக்காரத்தனம்' என்று சிலரால் பரிகசிக்கப்பட்டது.

"நாட்டிலே ஜனங்கள் பசியாலும் பட்டினியாலும் பிணியாலும் குளிராலும் பீடிக்கப்பட்டு உயிரை விட்டுக் கொண்டிருக்கையில் நாடகம் என்ன வேண்டிக் கிடக்கிறது, நாடகம்!" என்று வெளிநாட்டு முதலாளிக் கும்பல் பத்திரிகைகள் ஏளனம் செய்தன.

ஆனால் அந்தப் பெயர் சொல்லாத நாட்டின் ஆட்சியை நடத்திவருகிறவர்கள் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள், தெரியுமா?

"இருபது வருஷத்துக்கு முன்னால் நாங்கள் தேசமெங்கும் குழந்தைகள் நாடக சாலைகளை ஏற்படுத்தியதனால்தான் இன்றைக்கு மலை போல் வந்த ஜெர்மன் படையெடுப்பை எதிர்த்து நின்று வென்றோம்: இதோ பெர்லினில் செங்கொடி பறக்கிறது!" என்கிறார்கள்.

அன்றைக்கு அந்த நாடகங்களைப் பார்த்த குழந்தைகள்தான் இன்று தங்கள் தாய் நாட்டின்மீது படை யெடுத்து வந்த நாஜிப் படைகளைத் துரத்தி யடித்து வெற்றி வீரர்களாக பெர்லின் வரையில் போயிருக்கிறார்கள்.

இளம் வயதில் அவர்கள் பார்த்த நாடகங்கள் அவர்களுடைய உள்ளங்களில் அத்தகைய தேச பக்தியையும் வீர உணர்ச்சியையும் மூட்டி வளர்த்த படியால்தான், இன்றைக்கு அவர்கள் இவ்வளவு மகத்தான, உலகம் வியக்கும்படியான வீரச் செயல்களைச் செய்வது சாத்தியமாயிற்று.

* * *

மேலே குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிச் சமீபத்திலேதான் நான் படித்தேன். "இண்டர்நேஷனல் லிடரேச்சர்" என்ற பெயருடன் ருஷிய சோவியத் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டு வரும் மாத சஞ்சிகையின் 1914-ம் வருஷத்துச் செப்டம்பர் இதழில் படித்தேன்.

படித்துச் சில நாளைக்குப் பிறகு திருச்சியில் டி. கே. எஸ். சகோதரர்கள் என்னும் பிரசித்தி பெற்ற நாடகக் கம்பெனியார் நடத்தும் "ஔவையார்" என்னும் நாடகத்தைப் பார்த்தேன்.

இந்த நாடகத்தைப் பார்த்து வந்த போதும், அதன் முடிவிலும், எனக்கு என்ன தோன்றியது என்றால், நம் கையில் மட்டும் அரசாங்க அதிகாரம் இருந்தால் இந்த நாடகக் கம்பெனியையும் இந்த "ஔவையார்" நாடகத்தையும் உடனே நாட்டின் பொது உடைமையாக ஆக்கிவிட வேண்டும் என்பதுதான்.

ஆம்; இந்த நாடகக்காரர்களை ஒரே இடத்தில் வெகு காலம் இருக்கவே அனுமதிக்கக் கூடாது. ஊர் ஊராகப் போய் ஒவ்வொரு

மாதம் இருக்கச் செய்ய வேண்டும். அந்தந்த ஊரிலுள்ள குழந்தைகளை யெல்லாம் இலவசமாக இந்த நாடகத்தைப் பார்க்கச் செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் குழந்தைகளும் இந்த நாடகத்தைப் பார்த்துவிட வேண்டும். ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை பார்த்துவிட வேண்டும்.

பள்ளிக்கூடத்தில் எத்தனை வருஷம் படித்தாலும் அடையமுடியாத லாபத்தையும் நமது குழந்தைகள் அடைந்துவிடுவார்கள். பழந்தமிழ்நாட்டின் பண்பாடு எத்தகையது என்பதை அவர்கள் நன்றாக அறிந்து கொண்டுவிடுவார்கள்.


இதைக் காட்டிலும் நமது குழந்தைகளுக்கு நாம் செய்யக்கூடிய நன்மை வேறு என்ன இருக்கிறது?

மேற்கூறியவாறு "ஔவை" நாடகத்தைப் பொது உடைமையாகச் செய்யும் காரியத்துக்காக மேற்படி நாடகக் கம்பெனியின் செலவுக்கு சர்க்காரிலிருந்து வருஷம் மூன்று லட்சம் ரூபாய் நன்கொடை கொடுக்கும்படி இருக்கலாம். ஏன் கொடுக்கக் கூடாது? இந்த மூன்று லட்சம் ரூபாய்ச் செலவினால் தமிழ்நாட்டின் குழந்தைகள் எத்தனையோ பல லட்சம் ரூபாய்ச் செலவில் அடைய முடியாத நன்மைகளையல்லவா அடைந்துவிடுவார்கள்?

* * *

ஔவையார் நாடகத்தைப் பற்றி நான் விவரமாக விமரிசனம் எழுதப் போவதில்லை. கல்லுப் பிள்ளையாராய் இருந்தால் அதன் துதிக்கை எப்படியிருக்கிறது, கண் எப்படி இருக்கிறது. மொத்தத்தில் வேலைப்பாடு எப்படி இருக்கிறது என்று விரிவாக விமரிசனம் எழுதலாம். வெல்லப் பிள்ளையாரைப் பற்றி "ஒரே தித்திப்பாயிருக்கிறது" என்று சொன்னாலே போதும் அல்லவா?

ஔவையார் நாடகம், பார்த்து அனுபவிக்க வேண்டிய கலைக்காட்சி மட்டும் அல்ல; தமிழர்களின் வாழ்க்கையை உயர்த்தக்கூடிய நிர்மாணத் திட்டத்தைச் சேர்ந்தது என்பதை வற்புறுத்துவதற்காகவே மேற்கண்ட உதாரணத்தைச் சொன்னேன். இப்பேர்ப்பட்ட சமூகத்துக்குப் பயனளிக்கக் கூடிய காரியத்தில் நாடகக் கலைப் பண்பு குறைவாயிருந்தால்கூட பாதகம் இல்லை என்று நான் சொல்வேன். ஆனால், இந்த நாடகத்தில் அப்படி யொன்றும் குறைப்படுவதற்கு இடமிருக்கவில்லை. நாடகக் கலையின் உயர்ந்த பண்புகள் இதில் இருக்கின்றன.



"அட பழைய காலத்துக் கடவுளே!"

விறுவிறுப்பும் வேகமும் இன்றிச் சப்புச் சவுக்கென்று இருக்கக்கூடிய ஒரு கிழவியின் கதையை வைத்துக்கொண்டு, சுமார் ஐந்து மணி நேரம் குழந்தைகள் முதல் முதியோர்களை, கண்கொட்டாமலும் கவனத்தை ஒரு கணம் அப்பால் இப்பால் திருப்பாமலும் பார்க்கும்படியாக நாடகம் நடத்துகிறார்கள் என்றால், எவ்வளவு தூரம் நாடகப் பண்பை உணர்ந்து நாடகத் திறமையோடு இதை அமைத்திருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

நடிப்புத் திறமையைப் பொறுத்தவரையில் இந்த நாடகத்தில் ஔவைப் பாட்டியாக நடிக்கும் ஸ்ரீ டி. கே. ஷண்முகம் அவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்கிறேன். வேஷம், பேச்சு, நடையுடை பாவனை எல்லாம் அவ்வளவு பொருத்தம். நடிப்போ அபாரம். விருந்துக்குப் போன இடத்தில், பெண்டாட்டியும் புருஷனும் வீட்டிற்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்த சமயம் திண்ணையில் உட்கார்ந்து மேற்படி சண்டையைக் கவனித்து வந்தபோது, ஔவையாரின் முகத் தோற்றங்கள் நடிப்புக் கலையின் உன்னத சிகரமாக விளங்கின.

அடுத்தபடி, குடியானவர்களாக நடித்த இரு ஹாஸ்ய நடிகர்களிடமும் மிகச் சிறந்த

ஹாஸ்யத் திறமை காணப்பட்டது. குற்ற மற்ற ஹாஸ்ய கடிப்பாலும் பேச்சாலும் அவர்கள் சபையோரை அடிக்கடி குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நாடகத்திலேயே எனக்கு மிகவும் பிடித்திருந்த ரஸமான காட்சி, ஒருவரிடம் ஒருவர் அன்பு கொண்ட குடியானவனும் அவன் மனைவியும் வாதப் பிரதிவாதங்கள் செய்வதும் ஔவையார் குறுக்கிட்டு இரு வருக்கும் சமாதானம் செய்து வைப்பதுமான வயற்புறக் காட்சியாகும். இந்தக் காட்சியில் மேற்படி மூவருக்கும் நடக்கும் சம்பாஷணை யில், விவசாயத் தொழிலின் சிறப்பு, விவசாயிகளுக்குரிய கஷ்ட நஷ்டங்கள், குடும்ப வாழ்க்கையின் உயர்ந்த அம்சங்கள் முதலிய பல முக்கியமான விஷயங்கள் வெகு ரஸமாக வெளியிடப் படுகின்றன. இடை யிடையே குற்றமற்ற ஹாஸ்யங்கள் 'குபீர்' 'குபீர்' என்று சிரிப்பை வரவழைக்கின்றன.

மேற்படி நாடகத்தில் என்னை மிகவும் உருக்கிய சம்பவம், அரசர் தரித்துக் கொண்டிருக்கும் பட்டு வேஷ்டி வேண்டிய குழந்தைக்கு, ஔவையார் அந்தப் பட்டை வாங்கிக் கொடுத்து விட்டு, பாரதியாரின் 'பாப்பாப் பாட்'டைக் குழந்தைக்குக் கற்பித்ததுவே யாகும்.

“தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்றுகும்பிடடி பாப்பா”

என்ற கவிதையை ஔவையார் அந்தக் குழந்தைக்குச் சொல்லிக் கொடுத்தபோது, சபையோர் அனைவருக்கும் புல்லரித்து விட்டது. ஔவையார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முந்தியவர், பாரதியார் இந்தக் காலத்தைச் சேர்ந்தவர் — என்னும் விஷயம் மறந்தே போய் விட்டது. சபையில் ஏற்பட்ட ஆரவார கரகோஷத்தினால் மண்டபமே இடிந்துவிடும் போலிருந்தது.

தமிழ் நாடு புத்துயிர் பெற்றுச் செழித்தோங்கப் போகிறது என்பதற்கு இதுவும் ஓர் அறிகுறி என்று நான் கருதினேன்.

இத்தகைய அருமையான நாடகத்துக்கு என்னை அழைத்துப் பார்க்கச் செய்த டி. கே. எஸ். சகோதரர்களுக்குப் பலவிதத்திலும் என் நன்றி உரியதாகும்.



“கல்கி” பத்திரிகையின் நிர்வாகஸ்தர்களில் ஒருவரான மாயவரம் ஸ்ரீ ஆர். கே. சுப்பிரமண்யப் பிள்ளையின் குமாரர் பரமானந்தத்துக்கும், கல்யாணசேயபுரம் ஸ்ரீ என். மாணிக்கம் பிள்ளை அவர்களின் குமாரி வசந்தகல்யாணிக்கும் மாயவரத்தில் சென்ற மே மாதம் 24-ம் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் உள்ளிட்ட பெரியோர்களும், ஸ்ரீ ஆர். கே. சுப்பிரமண்யப் பிள்ளையின் நிரவனை நண்பர்களும் 'கல்கி' காரியாலயத்தவர்களும் திருமணத்துக்கு வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். மணப்பந்தலில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் கச்சேரியும், குமாரிகள் ஆனந்தி, ராதா பரதநாட்டியமும் இனிது நடந்தேறின.



உன்னுடைய தற்காலமும் உன்னுடைய பிற்காலமும்

W. R. I. N. S. ல் சேவை செய்வது இந்திய பெண்களுக்கு, தங்களது தேசத்தின் பிற்காலத்தையும் அத்துடன் தங்களது பிற்காலத்தையும் உருவுவதில் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றுக்கொள்ளுவதற்கு சித்தப் படுத்திக்கொள்ள ஒரு அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறது. இந்திய பெண்களிடம் முன்னேற்றமடைந்து தேச சேவையில் மற்றநாட்டு பெண்கள் போல் முக்கிய பங் கெடுத்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் வளர்ந்து வருகிறது. வியாபாரம் கைத்தொழில் இலாகைகளில் இந்தியா தீவிரமாக முன்னேறிவருகிறது. இது பெண் களுக்கு தேவையான சந்தர்ப்பத்தை அளிக்கிறது. நிலைமை சமாதானமேற்பட்டதும் சிவில் உத்தியோகங்களுக்கு அனேக நன்கு பயிற்சி பெற்ற ஆணும் பெண்ணும் தேவையாய் இருக்கும் என்பது நிச்சயம். W. R. I. N. பயிற்சியும் அதில் அக்கறையுள்ள புது தொழில்களை செய்வதால் அடையும் அனுபவமும் அனேக பெண் களுக்கு லாபகரமான சிவில் வாழ்க்கைக்கு தேவையான யோக்யதாம்சங்களை கொடுக்கிறது என்பது நிச்சயம்.

அனேக பெண்கள் ஏற்கனவே சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் இன்னும் அனேகர் தேவையாய் இருக்கிறது. இந்தியாவின் மேலாதிவாய்ந்த பாரம்பரியத்துக்கு நீங்கள் அருகதையானவர்கள் என்பதை ருசுப்படுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

பூரா விவரங்களுக்கும் ஏதாவது ஒரு ரெக்ரூட்டிங் ஆபிஸ், அல்லது சமீபத்திலுள்ள W. R. I. N. S. யூனிட் கமாண்டர் அல்லது துறைமுகப் பட்டிணத்திலுள்ள நேவல் ஆபிசருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

WRINS ல் சேருங்கள்

பெண்களின் ராயல் இந்தியன் நேவல் ஸெர்விஸ்

பெண்களின் ஆக்ஸிலியரி படைப்பகுதி (இந்தியா)

AAA14TM.

கல்யாணப் பரிசு

நாடோடி

"நாங்கள் இஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து முகூர்த்தத்தை நடத்தி வைத்துத் தம்பதிகளை ஆசிர்வதிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்."

என்று முடியும் கல்யாணப் பத்திரிகையைப் படித்து முடித்ததும் என்னைத் தூக்கி வாரிப் போட்டது.

அப்பாடா! இந்த மனுஷர் தம் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணப் போகிறார் என்பதற்காக நமக்கு எத்தனை வேலை!

முதலில் இஷ்டமித்திர பந்து ஜனங்களை அழைத்துவர வேண்டுமாம்! இது முடிகிற காரியமா என்ன? நம் நாட்டில் இஷ்டமித்திர பந்து ஜனங்கள் ஒருவரோடொருவர் எவ்வளவு 'அன்னியோன்னிய'மாகப் பழகுகிறோம் என்று தெரிந்த யாரும் இந்தக் கட்டளையை இடவே மாட்டார்கள்.

போன வருஷம்தான் நாமும் நம் இஷ்டர்களும் கோர்ட்டில் சந்தி சிரித்ததை நாம் மறந்தாலும் நம் இஷ்டர்கள் மறப்பார்களா, என்ன? போன வாரம்தான் நாமும் நம் மித்திரர்களும் சண்டைப் பிடித்துக்கொண்டதை நம் மித்திரர்கள் மறக்கத் தயாராக இருந்தாலும் நாம் மறப்போமா, என்ன? நேற்றுத் தான் நாமும், நம் பந்து ஜனங்களும் அடித்துக் கொண்டதை, நாம் இருவரும் மறக்கத் தயாராக இருந்தாலும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மறப்பார்களா, என்ன? வேறு யார் மறந்தாலும் இந்த அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் மறப்பாரா, என்ன?

ஆனால் நல்ல வேளையாகக் கல்யாணப் பத்திரிகை போடும் யாரும் நாம் இஷ்ட மித்திர பந்து ஜனங்களுடன் வருவோம் என்று எதிர்பார்ப்பதில்லை. வந்தால்கூட முகத்தைச் சற்று சின்னதாகத்தான் வைத்துக் கொள்வார்கள் என்பதிலும் தடையில்லை.

இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்தப் பதங்கள் கட்டாயம் கல்யாணப் பத்திரிகைகளிலிருந்து விடுபட்டுப் போகும் என்பதிலும் சந்தேகமில்லை.

"நாலு நாள் முன்னதாக வந்திருந்து" என்று முன்னெல்லாம் கல்யாணப் பத்திரிகைகளில் போடுவார்களே, இப்பொழுது யாராவது போடுகிறார்களா, பாருங்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பானதுபோல், நாலு நாள் இரண்டு நாளாக மாறி, பிறகு ஒரு நாளாகக் குறைந்து, பிறகு அதுவும் இல்லாமல் போய்விட்டதல்லவா? அதே மாதிரி இதுவும் போய்விடும்.

ஆக, இஷ்ட மித்திர பந்து ஜனங்களை அழைத்து வருவதில் இத்தனை தொல்லை இருக்கிறது.

அடுத்தபடியாக அவர்கள் நமக்குக் கொடுக்கும் வேலையைக் கவனியுங்கள்.

முகூர்த்தத்தை நடத்தி வைக்க வேண்டுமாம்! "கல்யாணத்துக்கு வந்திருந்து" என்று மட்டும் சொன்னால் போதாதா, எதற்காக முகூர்த்தத்தையும் நடத்திவைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள் தெரியுமா? இதில்தான் பெரிய தந்திரம் இருக்கிறது. "கல்யாணத்துக்கு வந்திருந்து" என்று சொன்னால் வெறும் மரியாதைக்குச் சொன்னதாகக் கொண்டு, வராமல் இருந்து விட்டால் என்ன பண்ணுவது என்றுதான், நம்மை முகூர்த்தத்தையும் நடத்தி வைக்கும் படி சொல்கிறார்கள்.

ரயில் நெருக்கடி அதிகமாக உள்ள இந்த நாளில் கல்யாணத்துக்கு வருவதற்கு மிதியும், இடியும் நன்றாகப் படட்டுமே என்பதுதான் கல்யாணப் பத்திரிகைகள் அனுப்புகிறவர்களின் நோக்கம்.

சரி, எப்படியோ சமாளித்துக் கொண்டு, இஷ்டமித்திர பந்து ஜனங்களைக் கல்யாணத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறோம், முகூர்த்தத்தையும் நடத்தி வைக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அத்துடன் விடுகிறார்களா? மூன்றாவதாக ஒரு வேலை இடுகிறார்களே, அது லேசில் செய்ய முடிகிற காரியமா, என்ன என்று யோசித்துப் பாருங்கள்.

தம்பதிகளை ஆசிர்வதிக்க வேண்டுமாம்! இதை நினைக்கும்போதுதான் எனக்குப் பகீர் என்கிறது.

இதுவரையில் நான் எத்தனையோ கல்யாணங்களுக்குப் போய் எத்தனையோ தம்பதிகளை ஆசிர்வதித்தாகி விட்டது.

என்னுடைய சிறு வயதிலிருந்தே நான் இந்த ஆசீர்வாதம் செய்யும் வேலையைத் தொடங்கி விட்டபடியால், வயதில் என்னைவிடப் பெரியவர்களான தம்பதிகளைக் கூட ஆசீர்வதித்திருக்கிறேன்.

ஆனால் ஒருவராவது அதற்காக என்னை வாழ்த்த வேண்டுமே, கிடையாது. அதனால் தான் ஆசீர்வாதத்தை நினைக்கும்போதெல்லாம் எனக்குப் பகீர் என்கிறது என்றேன்.

ஆசீர்வாதம் பண்ணுவதில் என்ன சிரமம் இருக்கிறது, மங்கள அட்சதையைத் தம்பதிகளின் தலையில் போடவேண்டியதுதானே என்று நீங்கள் கேட்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

“தம்பதிகளை ஆசீர்வதிப்பது” என்றால் மங்கள அட்சதையைத் தலையில் போடுவது என்று அர்த்தமில்லை. கல்யாணப் பத்திரிகை அனுப்பிய பெற்றோர்களுக்கு இந்தக் காரியத்தைத் தங்களுக்கே செய்யத் தெரியாதா? கல்யாணத்துக்கு வருகிறவர்கள் எல்லாருக்குமாகச் சேர்த்து ஒரு கூடை அட்சதையைத் தம்பதிகள் தலையில் கொட்டத் தெரியாதா, என்ன!

பின் ஆசீர்வாதம் பண்ணுவது என்றால் என்ன அர்த்தம் தெரியுமா? தம்பதிகளுக்கு ஏதாவது கல்யாணப் பரிசு வழங்குவது என்றுதான் அர்த்தம்.

கல்யாணப் பரிசு பொறுக்கி எடுப்பதைப் போன்ற திண்டாட்டம் உலகில் வேறு எந்தக் காரியத்துக்கும் கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஒன்றுக் கொன்று சோடியான இரண்டு விஷயங்களை இது விஷயத்தில் கவனித்தாக வேண்டி யிருக்கிறது.

முதலில் பணம் குறைவாக இருக்க வேண்டுமே என்று கவனிக்க வேண்டி யிருக்கிறது. இரண்டாவதாகப் பரிசு கனிசமாக இருக்க வேண்டுமே என்றும் பார்க்க வேண்டி யிருக்கிறது.

உலகில் சாமான்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ‘அழகை’ப் பார்க்கும் போது இந்த இரண்டு விஷயங்களும் ஒத்து வருவதில்லை. இதற்காகவே அநேகர் பணமாகவே ஓதிக் கொடுப்பது என்று வைத்திருக்கின்றனர்.

பணம் ஓதிக் கொடுப்பவர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது.

உதாரணமாக பெண்ணுக்கு நாம் ஓதிக் கொடுக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

பெண் நமக்கு மிகவும் வேண்டியவளா, அல்லது பெண்ணின் பெற்றோர்கள் நமக்கு மிகவும் வேண்டியவர்களா என்று கவனிக்க வேண்டும். பெண்ணின் பெற்றோர்கள் தான் நமக்கு மிகவும் வேண்டியவர்கள் என்றால், கட்டாயம் பணமாகத்தான் ஓதிக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அது பெண்ணுக்குப் போய்ச் சேராமல் பெற்றோர்களுக்குப் போய்விடும்.

சில பெற்றோர்கள் இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ கல்யாணப் பரிசாக வரும் பணத்தையும் தாங்கள் ஸ்வீகரித்துக் கொண்டு விடுவார்கள்; சாமான்களையும் அபகரித்துக் கொண்டு விடுவார்கள்.

கல்யாணத்துக்காக இத்தனை செலவழித்திருக்கிறோமே, அதில் ஒரு பகுதியாவது கல்யாணப் பரிசாகத் திரும்பி வரட்டுமே என்று அதை எடுத்துக்கொண்டு விடுவார்கள். சாமான்களையெல்லாம் தாங்கள் பிறருடைய கல்யாணங்களுக்குக் கல்யாணப் பரிசாகத் திருப்பிக் கொடுப்பதற்குப் பத்தி

சப்படுத்தி வைப்பார்கள். கூடிய வரையில் அந்தந்த வீட்டிலிருந்து வந்த பரிசை அந்தந்த வீட்டுக்கே ஞாபகமாகத் திருப்பி யடிப்பது என்று இவர்கள் வைத்திருக்கிறார்கள்.

இது தெரிந்து சிலர், பரிசு கொடுக்கும்போது, பெண்ணுக்கோ பிள்ளைக்கோ உபயோகப்பட வேண்டும், ஆனால் பெற்றோர்களுக்குத் துளிக்கூட உபயோகப் படக்கூடாது என்று, அப்படிப்பட்ட பொருள்களைப் பார்த்துப் பரிசாகக் கொடுப்பார்கள்.

உதாரணமாக வெகு ஆசார சீலரான ஒருவரின் பிள்ளைக்கு வெள்ளி சிகரெட் பெட்டி பரிசு அளித்தால் அதைத் தகப்பனார் பிடுங்கிக் கொள்ள முடியுமா?



கல்யாணம் வேண்டாம்!

டானியேலும் ரூபியும் ஒரே கலாசாலையில் படித்து வந்தார்கள். அவர்கள் இருவரும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டனர். இதையறிந்த அவர்களுடைய பெற்றோர்கள் அவர்களிருவருக்கும் விவாகத்தைச் செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். ஒரு ஞாயிற்றுக் கிழமை மாதாகோவில் ஒன்றில் பாதிரியாரின் முன்பு பெண்ணும் பிள்ளையும் மோதிரம் மாற்றிக்கொண்டு விவாகம் செய்துகொள்வதென முடிவு செய்யப்பட்டது. மோதிரம் மாற்றப்படும் சமயம் திடீரென்று டானியேல் "மாட்டேன், மாட்டேன்! மோதிரம் மாற்ற முடியாது! எனக்குக் கல்யாணமே வேண்டாம்!" என்று கண்டிப்பாய் மறுத்து விட்டான். எல்லோரும் ஆச்சரியத்தால் வாயடைத்து நின்றனர். "ஐயோ! ரூபிக்கும் டானியேலுக்கும் ஏதோ மனஸ்தாபம் வந்திருக்க வேண்டும்" என்று சிலர் அங்கலாய்த்தனர்.

கடைசியில், காரணம் என்னவென்று சில சிநேகிதர்கள் டானியேலை விசாரித்தார்கள்.

"ரூபியின் மோதிரம் அரைசவரன்தான் இருக்கும். என் மோதிரமோ முக்கால் சவரனில் செய்யப்பட்டது. ஆகையால் இதை நான் மாற்றவே மாட்டேன். எனக்குக் கல்யாணமே வேண்டாம்!" என்றான் டானியேல்!

பாக்கி எல்லா விஷயங்களிலும் பாஷன்கள் மாறுவதுபோல் கல்யாணப் பரிசு விஷயங்களிலும் பாஷன் மாறிக் கொண்டு வருவதாகத் தெரிகிறது. சில வருஷங்களுக்கு முன் நடந்த கல்யாணத்தில் கவனித்திருக்கிறேன். பரிசு கொடுத்தவர்கள் எல்லாரும் ஆளுக்கொரு சின்ன வெள்ளி கப் பரிசாக அளித்தார்கள். பிறகு வெள்ளி கப், வெள்ளித் தட்டாக மாறியது. பிறகு அது வெள்ளி டம்ளராக உருவெடுத்தது. பிறகு வெள்ளி டீ செட் வந்தது. டீ செட் மாறி இப்பொழுது 'டாய்லெட் செட்' வந்திருக்கிறது.

ஆனால் இதை விட இன்னும் குறைந்த பணத்தில் அதிகக் கனிசமாகப் பரிசு அளிப்பதற்கு ஒரு நல்ல வழி எனக்குத் தோன்றுகிறது. வெள்ளியை விட மரம் கனிசமல்லவா? ஆகவே வெள்ளியில் போடும் பாதிப் பணத்தில் மரத்தில் ஒரு கனிசமான சாமான் கிடைக்கிறது. அதை ஏன் எல்லாரும் பரிசாகக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன்?

வெள்ளி டம்ளர்கள் ஏராளமாக வந்து விட்டால் அதை வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது என்ற திண்டாட்டம் இதில் இல்லை. எத்தனை வந்தாலும் எல்லாருக்கும் உபயோகத்துக்குக் கொடுக்கலாம். அதனால் அது தேய்ந்து விடாது. இன்னும் அதை வைத்துக் கொண்டு பணம் கூடச் சம்பாதிக்கலாம். அது என்ன தெரியுமா?

பன்னிரண்டு ரூபாய் விலையில் விற்கும் அழகான பெட்டி ராட்டை. அந்தப் பெட்டியின் அழகையும், சேர்த்தியையும் பார்க்கும்போது, அதைப் பரிசாக இன்னொருவருக்குக் கொடுக்க மனது வராது. அத்தனை சேர்த்தி!

ஆகவே அடுத்த கல்யாண அழைப்பு வரும்போது 'கல்யாணப் பரிசு என்ன கொடுப்பது' என்று மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டாம். பேசாமல், ஒரு அழகான பெட்டி ராட்டை வாங்கிக் கொடுத்து விடுங்கள். மலிவுக்கு மலிவு, கனிசத்துக்குக் கனிசம்! மகாத்மா காந்தியின் புதிய நிர்மாணத் திட்டத்துக்கும் உதவி செய்ததுபோல் ஆகும்.

ஆமாம், கட்டுரையின் ஆரம்பத்தில் ஏதோ கல்யாணப் பத்திரிகை வந்ததாக எழுதியிருக்கிறீர்களே, அதற்கு என்ன பரிசு கொடுத்தீர்கள் என்று கேட்கிறீர்கள்? பெட்டி ராட்டைதான் கொடுத்தேன். மாப்பிள்ளை பரமானந்தமும் பரமானந்தமாக ஏற்றுக் கொண்டார். பிறருக்கு உபதேசம் பண்ணுவது ஒன்று, தான் செய்வது இன்னொன்று என்னும் நிலைமைக்கு நான் இன்னும் பெரிய மனிதன் ஆகவில்லை!

வனதேவதையும் நாயும்



ராஜி

பாலுவின் வீட்டில் நல்ல வெள்ளை நாய் ஒன்று இருந்தது. அது பாலுவோடு எப்பொழுதும் காரில் சவாரி செய்தபடியே இருக்கும். ஒரு நாள் பாலு அந்த வெள்ளை நாயை வாசற் பக்கம் கட்டி வைத்திருந்தான். நாயின் அதிர்ஷ்டவசமாக அதன் கழுத்தில் கட்டியிருந்த பட்டை அவிழ்ந்துவிட, வெள்ளை நாய் வெளியே ஓடிவந்தது. "அப்பாடி! இன்றைக்காவது கொஞ்சம் தமாஷாக இந்த ஊரைச் சுற்றிவிட்டு வரலாம்" என்று சந்தோஷமாக வாலை ஆட்டிக் கொண்டே கிளம்பிற்று வெள்ளை நாய்.

நாய் வேகமாகச் சென்று பக்கத்திலுள்ள காட்டின் அருகில் சென்றது. அப்பொழுது பூமியில் ஓர் எலும்புத் துண்டைப் போல ஒரு வஸ்துவைப் பார்த்தது. உடனே அந்த வஸ்துவைத் தன் காலால் தள்ள, அது ஒரு மந்திரக் கோலாக இருந்தது. வெள்ளை நாய்க்குச் சந்தோஷம் அதிகமாயிற்று. அந்தச் சமயத்தில் அங்கு பெரிய புலி ஒன்று வந்தது. நாய் பயப்படாமல், "புலி என்றால் உயர்வோ? எதற்கெடுத்தாலும் மனிதர்கள் 'புலி, புலி' என்று உயர்வாகவே பேசுகிறார்கள். இந்தப் புலியும் என்னைப் போல ஒரு நாயாக இருந்தால் அதோடு நான் விளையாடலாமே" என்று சொல்லி வாய் மூடுவதற்குள் என்ன ஆச்சரியம்! புலி உடனே ஒரு நாயாக மாறிப் பட்டணத்திற்கு ஓட ஆரம்பித்தது. "அடாடா, இப்பொழுது தான் எனக்கு நான் கையில் வைத்திருக்கும் மந்திரக் கோலின் சக்தி தெரிகிறது"



என்று குதித்துக் கொண்டே வெள்ளை நாய் ஓடிற்று.

அப்பொழுது ஒரு சிங்கம் கர்ஜித்துக் கொண்டே நாயின் எதிரில் வந்தது. உடனே நாய் "நான் மாத்திரம் நாயாக இருப்பானேன்? நீ சிங்கமாக இருப்பானேன்? எனக்குத் துஷ்ட மருகமாக மாறப் பிரியமில்லை. ஆதலால் நீயும் என்னைபோல் ஒரு நாயாக மாறிவிடு" என்று சிங்கத்தைப் பார்த்து மந்திரக் கோலினால் சுட்டிக் காண்பித்தது. அடுத்த நிமிஷத்தில் சிங்கம் ஒரு நாயாக மாறிப் பட்டணத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது.

நாய் சந்தோஷத்தினால் குதித்துக் கொண்டே ஓடும்போழுது, ஒரு கரடி எதிரே வந்தது. "கரடியே! புலியும், சிங்கமும் நாயாக மாறிய பிறகு நீ மாத்திரம் கரடியாக இருப்பது நியாயமில்லை; ஆதலால் நீயும் என்னைப் போல் நாயாக மாறிவிடு" என்று சொல்ல கரடியும் அடுத்த நிமிஷம் ஒரு நாயாக மாறி, பட்டணத்தை நோக்கி ஓட ஆரம்பித்தது.

நாய் தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக் கொண்டது. "என்னை யார் குறுக்கிட்டாலும் அவர்களை நாயாக மாற்றப் போகிறேன்" என்று இறுமாப்புடன் சொல்லிக் கொண்டது. சற்று யோசித்துவிட்டு: "ஏன் என்னை வளர்க்கும் பாலுவையும் என்னைப் போல நாயாக மாற்றக் கூடாது? என்னை அடிக்கடி வாலை வளைத்து விளையாடுகிறான்" என்று தன் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தது.

"இனிமேல் இந்த நாயை இப்படி விட்டு வைத்தால் ஆபத்து" என்று சொல்லிக் கொண்டே நாயின் பின்னால் வந்து கொண்டிருந்த வன தேவதை தான் தவறிக் கீழே விட்டிருந்த மந்திரக்கோலை நாயினிடமிருந்து பிடுங்கிக் கொண்டது. நாய்க்குத் தூக்கிவாரிப் போட்டது. உடனே வனதேவதை, "ஏ நாயே! என் மந்திரக்கோலை திருடியதுமல்லாமல் அதை வைத்துக்கொண்டு துஷ்ட மிருகங்களை நாய்களாக மாற்றினாய். அதுவுமல்லாமல் உன்னை வளர்த்த பாலுவையும் நாயாக மாற்றப் பார்த்தாய். ஆனால், இம்மந்திரக்கோலை




பிறர் உபயோகித்தால் அதன் சக்தி ஒரு நாளைக்கு மேல் நீடிக்காது" என்று சொல்ல, நாய் முக வாட்டத்துடன் நின்றது.

உடனே வனதேவதை, "அதோ பார்! கார்ப்பரேஷன் நாய் வண்டி. ஊரில் திரியும் நாய்களை பிடித்துக் கொண்டு போய் அடைத்து வைப்பதற்கு வந்திருக்கிறது. உன் கழுத்தில் தோல் பட்டையும் இல்லை. லைசென்சும் இல்லை. உன்னையும் அந்த வண்டிக்கு அழைத்துப் போகப் போகிறார்கள். இனியாவது உனக்கு நல்ல புத்தி வரட்டும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு மனிதன் ஓடோடியும் வந்து கயிற்றினால் நாயைக் கட்டி மற்ற நாய்களை அடைத்திருக்கும் வண்டியில் ஏற்றி விட்டான்.

"காரில் சவாரி செய்யும் எனக்கா இந்தக் கதி?" என்று வருத்தப்பட்டு மற்ற நாய்களைக் கண்டு அவமானத்தால் தலை குனிந்தது. அந்தச் சமயத்தில் ஒரு அதிசய சம்பவம் நடந்தது. வண்டியிலிருந்த மூன்று நாய்கள் திடீரென்று புலியாகவும், சிங்கமாகவும்,



கரடியாகவும் மாறின. "அடாடா, நான் நாயாக மாற்றிய மிருகங்கள் அல்லவா இவைகள்! வன தேவதை சொல்லியபடி இவைகளை மாற்றி ஒரு நாள் ஆகிவிட்டதல்லவா? அதனால் இவைகள் சுய ரூபத்தை அடைந்து விட்டன" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டது. திடீரென்று வண்டியில் புலியையும், சிங்கத்தையும் கரடியையும் பார்த்த வண்டிக்காரன் பயந்து வண்டிக் கதவைத் திறந்து விட்டு, பயந்து உளறி அடித்துக் கொண்டு ஓடினான். நாயும் இதுதான் நல்ல சமயம் என்று வண்டியிலிருந்து குதித்து தன் எஜமானர் வீட்டுக்கு ஓடிற்று. காணாமலிருந்த நாய் ஓடி வந்ததும் பாலு நாயைக் கட்டிக் கொண்டான். அன்று முதல் நாய் மிகவும் நல்ல நாயாகவே இருந்தது.




"என்னடா, போடாங்கறேன், போகமாட்டேன்கிறேயே? யாரடா அது உன்னே? டேய், செருப்பை எடுத்துண்டு வாடா!"

பிச்சைக்காரன் :—நீங்க மவராசனா இருப்பீங்க! சீக்கிரம் செருப்பைக் கொண்டுவரச் சொல்லுங்க. வெய்யிலில் நிற்க முடியல்லீங்க! கால் பத்திக்குதுங்க!

ப்ளான்டர்ஸ் நீலகிரி தேயிலை



2 சிக்கனமுள்ள ரகங்கள்



இன்று இந்தியா முழுவதிலும் டீ ரசிகர்கள் ப்ளான்டர்ஸ் டீயின் லோட்டஸ், சிகப்பு டைமண்ட், ரகங்களை உபயோகிக்கின்றனர். அவைகள் உயர்ந்த டீ. விலையில் குறைவானது. அவற்றின் மணம், ருசி இவைகளை நீங்கள் விரும்புவீர்கள். அவைகள்தான் வீட்டில்தினந் தோறும் அருந்துவதற்கு உகந்த டீ என்பதை மற்றவர்களைப் போல் நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்கள்

இன்றே அவைகள் உபயோகித்துப் பார்க்கத் தகுந்தவை.

PTK-13TM.

தி ப்ளான்டர்ஸ் கம்பெனி லிட்.,

கூடலூர், நீலகிரி, தென் இந்தியா.

இருளில் ஒளி



ஜி. எஸ். மணி

அன்று பூராவும் வாஸு வெறி பிடித்தவனைப் போல ஓரிடத்திலும் நிலை கொள்ளாமல் தத்தளித்துக் கொண்டேயிருந்தான். மனசு அலை பாய்ந்து கொண்டிருந்தது. நெற்றியில் சதா துளித்துக் கொண்டேயிருந்தது வியர்வைத் துளிகள்.

மாலை ஆறு மணி சமயமாகி விட்டது. தலை குனிந்தபடியே போய்க் கொண்டிருந்த வாஸு அகஸ்மாத்தாய் நிமிர்ந்து நோக்கினான்.

கலங்கி நின்ற அவன் கண்களிலே எதிரில் தென்பட்ட மங்களகரமான அந்த அகல் தீப வரிசைகளின் தெய்விகம் கலந்த ஒளி உள்ளத்தில் பதிந்து அவன் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பியது.

திவ்ய சௌந்தர்யவதியான பதினெட்டு வயது மங்கை யொருத்தி மணி மணியாக ஜ்வலித்துக் கொண்டிருந்த அத் தீபச் சுடர்களுக்கு எண்ணெய் வார்த்துக் கொண்டும், மேலும் மேலும் தீபங்களைக் கொண்டு வந்து அவ் வீட்டு வாசலை அழகுற அலங்கரித்துக்கொண்டு மிருக்கக் கண்டான்.

அப்போதுதான் வாஸுவுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. அன்றைய தினம் 'அண்ணாமலைக் கார்த்திகைத் தீப'மல்லவா! சில குடும்பங்களில் அன்றும் விளக்கேற்றி வைப்பதுண்டு.

மறுநாள் பொழுது விடிந்தால் 'திருக் கார்த்திகை!'

அச்சமயம் அவனும் தன் வீட்டில் — தன் குடும்பத்துடன் இருந்திருக்கும் பட்சத்தில், தன் மனைவியும் அப்போது அதே மாதிரி கார்த்திகைத் தீபமேற்றி லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்து விளங்கச் செய்திருப்பாளல்லவா? — என்று யோசித்தான்.

அவனே சற்றும் எதிர்பார்க்காத விதத்தில் அன்று காலையில் அவன் குடும்பத்தில் வீசிய புயலை நினைத்துப் பார்த்தான்.

. . .

சில நாட்களுக்கு முன்பாக வாஸு ஒரு நாள் எங்கோ வெளியில் போயிருந்தவன் அஸ்தமிக்கும் சமயத்தில் தன் வீட்டிற்குள் நுழைந்தான்.

காலடி ஓசையிலிருந்தே அவனைத் தெரிந்து கொள்ளும் அவன் மனைவி விசாலம் வழக்கம்போலவே அழகிய வதனத்தில் தவழும் மலர்ந்த சிரிப்புடனே அவனை வரவேற்றாள்.

"அம்மாவை எங்கே காணோம்?" என்று வினவினான் வாஸு நாலாபுறமும் பார்த்துக் கொண்டே.

"அடுத்த வீட்டுக்குப் போயிருக்காள் போலிருக்கு! குரல் கேட்கிறது!" என்று பதிலளித்தாள் விசாலி.

அதுவரையிலும் தன் கையிலேயே பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்த பையைத் திறந்து, அதனுள்ளிருந்து, காகிதத்தில் சுற்றப்பட்டிருந்த வெகு அழகான ஒரு 'பார்ஸ'லை ஜாக்கிரதையாக வாஸு வெளியில் உருவினான்.

காகிதத்தினுள்ளிருந்தது கண்களைக் கவரும்படியான ஒரு புடவைதான்; ரொம்பவும் மிருதுவான பட்டுப் புடவை! ஓரத்தில் ஓடிய நான்கு இழை ஜரிகைக் கரையுடன், மேக வர்ணத்தில் நல்ல வனப்புடன் விளங்கியது.

விசாலத்தின் ஹிருதயத்தில் பொங்கிய எல்லை கடந்த ஆனந்தம் அவள் வதனத்தில் வழிந்தது.

அதைக் கண்ணுற்ற வாஸு புளகாங்கிதமடைந்தான். அதி ஆவலுடன் அவள் முக மண்டலத்தையே பார்த்தவண்ணம் மெய் மறந்திருந்தான்.

விசாலம் புடவையைப் பார்த்தவண்ணமே பதிலொன்றும் சொல்லாமல் சிறிது நேரம் மௌனமாய் நின்றாள். பிறகு, "நீங்கள் இந்தப் புடவை வாங்கிக் கொண்டு வந்திருப்பது அம்மாவுக்குத் தெரியுமா?" என்று கூரிய அஸ்திரத்தைத் தொடுத்து விட்டாள்.

'தெரியா'தென்ற தோரணையில் தலையசைத்தான் வாஸு.

"நிஜமாகவா?"

"ஊஹூம்! ஏன் தெரிய வேண்டும்?"

'ஏன் தெரியாமல் வாங்கி வந்தேன்?''

ரேழியில் யாரோ வருவது போன்ற காலடிச் சத்தம் கேட்கவே அவ்விருவருமே ஏக காலத்தில் திடுக்கிட்டுப் போயினர். உடனே வாசு 'சட்' டென்று எழுந்து விசாலம் கையில் வைத்துக்கொண்டிருந்த புடவையை 'வெடுக்' கென்று பிடுங்கி, அவசர அவசரமாகத் தன் மடிக்குள்ளே மறைத்து வைத்துக் கொண்டான்.

அதே சமயம் அந்த இடத்திலே வாசுவின் தாயாரும், விசாலத்தின் மாமியாருமான ஸ்ரீமதி அகிலாண்டம் பிரசன்னமானாள்.

2

ஸ்ரீமதி அகிலாண்டத்திற்கு வயது கிட்டத் தட்ட அறுபதுக்கு நெருங்கி விட்டபோதிலும் மகா முன் கோபக்காரி. கணவனை இழந்தவளானாலும் ஆதி முதற் கொண்டே அதிகார தோரணையிலேயே நடந்து வந்தவள். அற்ப விஷயங்களுக்கெல்லாம் பட பட வென்று அனாவசியமான வார்த்தைகளைப் பொரிந்துக் கொட்டி விடுவாள்.

அவள் பின்னைக்கு வந்து வாழ்க்கைப்பட்ட விசாலம், வரும்போது தன் பிறந்த வீட்டிலிருந்து ஒரு சிறு துரும்பைக் கூடக் கொண்டுவரவில்லை. அதற்கு விசாலம், பாவம் என்ன செய்வாள்? வறுமைவாய்ப் பட்டிருந்த பெருத்த சம்ஸாரிகளுக்குப் பிறந்துவிட்டது அவள் தப்பா?

ஆனால் அகிலாண்டத்திற்கு இதெல்லாம் ஒருபோதும் தெரியாது. அவளுக்குத் தன் குறையே பெரிய குறை: ''என் பின்னைக்கு என்ன குறைச்சல்? 'பொன்னை வைக்கிற இடத்திலே பூவையாவது வை' என்று சொல்லியிருக்கு! அதுக்குக் கூடவா வக்கில்லாமல் போய்விட்டது?'' என்பாள் அகிலாண்டம்.

இத்தனைக்கும் அகிலாண்டத்திற்குத் தன் பின்னையிடமும், நாட்டுப் பெண்ணிடமும் தீராத வெறுப்பு ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகிக்கவும் இடமில்லை. அருமையான ஒரே பின்னையிடத்திலும், அதி சௌந்தர்யவதியாகவும், குணக் களஞ்சியமாயுமிருக்கும் விசாலத்திடமும் அவளுக்கு அன்பில்லையென்று சொல்லிவிட முடியுமா?

அவள் தன் பின்னையையும், நாட்டுப் பெண்ணையும் கொண்டாடிக் கொள்ளத் தான் செய்வாள். தூக்கி வைக்கும் சமயத்தில் அவர்களைத் தலையிலும் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவாள்! ஆனால் அது மாத்திரம் ரொம்பவும் அபூர்வத்தில் நிகழ்வதாயிருக்கும்!

அன்று அண்ணாமலைக் கார்த்திகை தீபம்! திருவண்ணாமலையில் லக்ஷ தீபம் சுடர் விட்டு ஜ்வலிக்கும் நன்னாள்.

அன்று விடியற்காலையில் வாசு படுக்கை விட்டெழுந்து, வீட்டைச் சுற்றிலும், எல்லா அறைகளிலும், ஒட்டடை அடித்துச் சுத்தம் செய்யத் தொடங்கினான்.

ஒட்டடை அடித்த குப்பை அறை பூராவும் சிதறிக் கிடந்தது. எல்லாம் நன்றாகச் சுத்தம் செய்தான பிறகு அங்கே அலங்கோலமாக வைக்கப்பட்டிருந்த பெட்டி படுக்கைகளையெல்லாம் மறுபடியும் அதனதன் இடத்தில் ஒழுங்காக வைக்க ஆரம்பித்தான்.

ஆயிற்று; எல்லாம் முடிந்து விட்டது; அந்த ஒரே ஒரு பெட்டிதான் பாக்கி; அதையும் எடுத்து வைத்து விட்டால் அவன் வேலை அத்துடன் தீர்ந்து போகும்......

அடாடா!... அது வரையில் அவன் மறந்தே போய் விட்டானே! அந்தப் பெட்டிக்குள்தானே அவன் அன்று அந்தப் புடவையை ஒளித்து வைத்தான்! நாளைப் போது விடிந்தால் கார்த்திகையாயிற்றே! அன்று சாயந்திரத்திற்குள்ளாக ஏற்கனவே விசாலத்திடம் சொல்லியிருந்தபடி, அந்தப் புடவை அவள் பிறந்தகத்திலிருந்து வந்தது என்று சொல்லி அதை அம்மாவின் எதிரில், அவளிடம் சேர்த்துவிட வேண்டியதாயிற்றே! புடவையை ஜாக்கிரதைப் படுத்து முன் இந்தப் பெட்டியை அதன் இடத்தில் வைத்து விடலாம் என்று நினைத்த வாசு பக்கங்களில் பிடியில்லாத அப்பெட்டியின் அடிப்பாகத்தில் இரு கைகளையும் கொடுத்துத் தூக்கினான்.

கொஞ்சம் கூட எதிர்பார்க்காதபோது அந்தப் பெட்டி திடீரென்று அவன் பிடியிலிருந்து நழுவி, 'தடா'லென்று பெருத்த சத்தத்துடனே தரையில் விழுந்தது. திறந்திருந்த பெட்டியாதலால் அதனுள்ளிருந்த அத்தனை சாமான்களும், தலை குப்புற விழுந்து, நாற்புறமும் சிதறியோடின.

''என்னடா சத்தம் அது. இடி விழுந்தது போலே?'' என்று அதிகார தோரணையில் கூவிக்கொண்டே அந்த இடத்திற்கு முதலில் ஓடி வந்தாள் அகிலாண்டம்.

வந்தவள், பெட்டியிலுள்ள சாமான்கள் கீழே உருண்டு கிடப்பதைப் பார்த்து, “இந்த நல்ல துணிமணி யெல்லாம் இப்படிக் கசங்கி வீணாய்ப் போகலாமா! அத்தனையும் பணமில்லையா? என்டா, இது என்னடா இது? இது ஏதுடா? புதுப் புடவை மாதிரி யிருக்கே!” என்று சொல்லிக்கொண்டே அவள் கண்ணில் பட்டுவிட்ட அந்தப் புடவையை தன் கையிலெடுத்துக் கொண்டு பார்க்க ஆரம்பித்து விட்டாள்.

வாஸுவின் நெஞ்சு உலர்ந்தது; நாக்கு வறண்டது; ஹிருதயம் படபடத்தது.

“என்டா, இந்தப் புதுப் புடவை ஏது? சமீபத்தில் வாங்கினயா?” என்ற வார்த்தைகள் அகிலாண்டத்தினிடமிருந்து ராமபாணம்போல் வெளிப்பட்டது.

வாஸுவின் அடி வயிற்றில் பகீரென்றது. “புதுப் புடவையா! இல்லையே? எங்கே? கொடு பார்க்கலாம்!” என்று ஒன்றுமே தெரியாதவனைப்போல் அந்தப் புடவையைத் தன் கையில் வாங்கிக்கொண்டு ஒன்றும் புரியாமல் தடுமாறினன்.

அகிலாண்டம் அவன் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

வாஸுவுக்கு மனம் குழம்பித் தத்தளித்தது. அவனுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. எப்பேர்ப்பட்ட நெருக்கடியான நிலைமை! என்ன இக்கட்டு!

“என்னடா! புடவையைக் கையில் வாங்கிக்கொண்டு பேயறைந்தவனைப்போல பேந்தப் பேந்த முழிக்கிறயே? சொல்லேன்? எப்போ வாங்கினய்?”

“நான் வாங்கினேனு? — இல்லையே!” என்ற வார்த்தைகள் வாஸுவையும் அறியாமல் அவனிடமிருந்து தயங்கிய வண்ணம் வெளிப்பட்டன.

“என்ன பொய்! என்ன பொய்! பின்னே இது அவளுக்கு எப்படித் தான் கிடைத்தது? உனக்கே தெரியாமல் அது என்ன அவளுடைய திருட்டுத்தனம்? அதைத் தெரிஞ்சுக்கணுமே, இப்போ?”

“கூப்பிட்டுக் கேளேன் அவளை. இப்பவே. தன்னாலே குட்டு வெளிப்படறது!”

“பின்னே? கேட்காமல் இந்த விஷயத்தை இதோடு விட்டுவிடுவேன் என்று நீ நினைத்தாய்?” என்று சீறியவளாய் ஸ்ரீமதி அகிலாண்டம் “யாரடி அங்கே? வாடி இங்கே!” என்று அளவுக்கு மீறிய அதிகாரக் குரலில் தனது பெண்மைக் கொடியை காட்டினள்.

விசாலம் காலோடு தலை நடுங்கிக் கொண்டே தலை குனிந்தபடி அவ்வறையில் நுழைந்தாள்.

கட்டுவிரியன் போல அவளை உறுத்து விழித்துக் கொண்டே, “என்டி? இந்தப் புடவையைத் தெரியுமா உனக்கு? ஏதடி இது? சொல்லேண்டி வாயைத் திறந்து?” என்றாள்.

இப்பொழுதும் விசாலம் உடனே பதில் சொல்லவில்லை. அவள் என்ன சொல்லப் போகிறளோ வென்று அங்கே நின்று கொண்டிருந்த வாஸுவைத் தயங்கிய வண்ணமே நோக்கினாள். அவளது அழகிய கண்கள் கலங்கி யிருந்தன.

“உன்னையே நம்பி யிருக்கிறேன். விசாலி, என்னைக் கைவிட்டு விடாதே!” என்று அவளைப் பார்த்துக் கெஞ்சுவது போலிருந்தன வாஸுவின் கண்கள்.

கண்களில் நீர் ததும்ப அவள் ஸ்ரீமதி அகிலாண்டத்தை நோக்கிப் பரிதாபகரமாகக் கெஞ்சும் குரலில், கைகளை வணக்கமாய்க் கூப்பிக் கொண்டு, நடுங்கியபடியே — “அம்மா! என்னையும் அவரையும் நீங்கதான் மன்னிக்கணும் அம்மா. நிஜத்தை ஒளிக்காமல் சொல்லி விடறேன் — இந்தப் புடவையை எனக்கு வாங்கிக் கொடுத்தது இவர் தானம்மா!” என்று விசாலம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவளுக்குத் துக்கம் தாங்க மாட்டாமல் போய்—சிறு குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டாள்!

வாஸு அப்படியே திக்பிரமித்துப்போய் நின்று விட்டான். விசாலத்திட மிருந்து அவன் அந்த வார்த்தைகளைக் கனவிலும் எதிர்பார்க்கவில்லை என்பது அவனது அப்போதைய முகத் தோற்றத்திலிருந்து தெளிவாகத் தெரிந்தது.

ஆம்! — விசாலம், — தன் உயிரினும் இனியவள் — தன் விஷயத்தில் ஒருக் காலும் நம்பிக்கைத் துரோகம் செய்யவே மாட்டாள் என்று வாஸு எண்ணினன். அந்த விசாலமே, சற்றும் எதிர்பாராத விதத்தில் இப்படித் தன்னைக் கைவிட்டு விடுவதென்றால்!

விழி அப்படியே பிதுங்கிவிடும் போல் அவனைக் கடூரமான பார்வையினல் எரித்துக் கொண்டு நின்றாள் ஸ்ரீமதி அகிலாண்டம்.

அதை யுணர்ந்த வாஸு தடுமாற்றத்துடன், “இல்லை...ஆமா...ம்...ம்...வந்து ...... அதனல் என்ன அம்மா? அப்படியே


யுத்தத்திற்காகவும்
சமாதானத்திற்காகவும்
அதிகப்படியான சிக்கனங்கள்
பொருட்களை மிதமாகச் செலவிட்டு, அவை தாராளமாகக் கிடைக்கும்படிச் செய்யுங்கள்.
இந்நாட்களில் அநேக சாமான்கள் கிடைப்பது அபூர்வமாய் இருக்கிறது. தேவைப் பொருட்கள் வரத்தில் பெரிய நெருக்கடி யிருக்கிறது. நீங்கள் உங்கள் உபயோகிப்பதில் சிக்கனம் செய்து கொண்டாலொழிய ஏழைகள் அவைகளில் பங்கு பெற முடியாது. எல்லாவற்றையும் இயன்றவரை குறைவாக உபயோகிப்பது நாட்டுப் பற்றுடையவர்களின் கடமையாகும்.
சிக்கனமாக இருப்பது பண விஷயத்திலும் பிரயோஜனமானது. இப்படி செய்யப்படும் சிறிய சிக்கனங்கள், மாதாந்திர சேமிப்பாகிறது. சமாதானம் ஏற்பட்டு விலைவாசிகள் குறைந்த சமயத்தில் செலவு செய்ய, அதிகப்படியான ரூபாய் உபரியாயிருக்கும்.
உபயோகங்களில்லாத சமயம் சோப்பை உலர்த்தி வையுங்கள்.
அது அதிக நாட்களுக்குப் பயன்படும்.
சமையலுக்கு சிறிய அடுப்பு உபயோகியுங்கள்.
எரி துரும்பை மிச்சப்படுத்துங்கள்.
உங்களது மோட்டார் வண்டியை உபயோகிக்காமல் வைத்திருங்கள்.
பெட்ரோல் யுத்தத் தேவைக்கு வேண்டியிருக்கிறது.
சமாதானம் ஏற்படும் வரை
புது மேஜை நாற்காலி வகைகளை வாங்காதீர்கள்.
கலியாணச் செலவுகளைக் குறையுங்கள்.
அதற்குப் பதிலாகப் பணமாகக் கொடுத்து விடுங்கள்.
சில வேலைக்காரர்களைக் கொண்டு
வேலையை முடித்துக்கொள்ளுங்கள்.
ஒரு கடிதம் போதுமாயிருக்கையில்
தந்தியடிக்காதீர்கள்.
உங்களுக்கு இன்றியமையாதவை தவிர பிறவற்றை வாங்காதீர்கள்
இந்திய சர்க்கார் இ. & பி. இலாகா வெளியீடு.
AAA

தான் இருக்கட்டுமே !......... இப்போது என்ன குடி முழுகிவிட்டது ?...” என்றான்.

“ஓஹோ ! இத்தனை தைரியமும் வந்து விட்டதா உனக்கு ? யாரைக் கேட்டு நீ இப்போ இந்தப் புடவையை வாங்கிக் கொடுத்திருக்கே அவளுக்கு ? உன் சம்பாத்தியத்திலே விருந்தா ? வெளியிலே போய் ஒரு காசு சம்பாதிச்சுண்டு வர துப்பு இருக்காடா உனக்கு ?”

வாஸுவின் கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டது ! தலை கால் தெரியாமல் ஆகிவிட்டது அவனுக்கும் !

“இவ்வளவே போதும், எனக்கு ! நல்ல பாடம். இனிமேல் இந்த ஜன்மத்திலே உங்கள் இரண்டு பேர் முகத்திலும் விழிக்கிறதில்லை !” என்று இடியிடிப்பது போல் கூவிக்கொண்டே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பி விட்டான், வெளியிலே.

அதற்குள்ளாக அந்த வீட்டு வாசலில் அந்த ஊரே கூடிவிட்டது !

3

அந்தத் தாங்க முடியாத வேகத்திலே இன்னும் என்னவெல்லாமோ எண்ணி யெண்ணிப் பலவிதத்திலும் தமொற்ற மடைந்து போனான் வாஸு. எத்தனை பயங்கரமான எண்ணங்கள் ! என்ன கோர மான முடிவுகள் !

மணியாக ஆக வாஸுவின் உள்ளக் கொதிப்பும் சிறிது சிறிதாக ஆறிக் கொண்டே வரத் தொடங்கியது !

எதிர்த் திண்ணையிலே ஜ்வலிக்கின்ற அந்தத் தீபவரிசைகளின் தெய்வீக ஒளி, அவனுள்ளே சூழ்ந்து கிடந்த பயங்கர கினைவுகளாகிற கரிய இருளையும் ஊடுருவியது !

அவனும் அப்போது தன் வீட்டிலே— தன் குடும்பத்துடன் இருந்திருந்தால் விசாலியும், மஹா லக்ஷ்மியைப்போல், விளக் கேற்றி வைத்துத் தெய்வத்திடம் தன் மனோ பீஷ்டங்களை நிறைவேற்றி வைக்கும்படி பிரார்த்தித்துக் கொண்டிருப்பா ளல்லவா— என்ற ஒரே எண்ணம் அவனுள்ளத்திலே நிலைத்து நின்றது.

வெகு சீக்கிரத்திலே அந்த நினைவு வாஸுவின் நெஞ்சைக் கூரிய கத்தி கொண்டு அறுக்கவும் ஆரம்பித்துவிட்டது. அவன் மிகுந்த வேதனை யடைந்தான். சொல்ல முடியாத ஏக்கம் ஒன்று திடீரென்று அவனை வாட்டி வதைக்கத் தொடங்கியது.

இப்போது விசாலி எப்படி யிருக்கிறாளோ, பாவம் ! எப்படி யிருப்பதென்ன ? அவன் பிரிவினால் அழுது அழுது அவளுடைய அழ கான கண்கள் இடுங்கிப் போயிருக்கும் ! தலைவாரிப் பின்னிக் கொள்ளாமல், சூன்ய மான நெற்றியுடன், சூன்யமான உள்ளத் துடன் இருப்பாள். விசாலி சத்தியத்தையே நம்பினாள் ! இப்போது அவள்தான் ஜயித்தாள் !

ஏனோ தெரியவில்லை, வாஸுவிற்குத் திடீரென்று விசாலியை மறுபடியும் கண் குளிர மனங்குளிர — ஆசை தீரப் பார்க்க வேணுமென்ற அடக்க முடியாத ஆவல் உண்டாயிற்று.

வாஸுவை அறியாமலேயே அவன் கால்கள் வந்த வழியே தன் ஊரைப் பார்க்கத் திரும்பவும் நடக்க ஆரம்பித்தன.

சுமார் மூன்று மணி நேரங்களுக்குப் பிறகு வாஸு அருகாமையிலிருந்த தன் கிராமத்திற்குச் சென்று திரும்பவும் தன் வீட்டினுள்ளே, தன் சிறு குடும்பத்தி னுள்ளே புகுந்தான் !

நெஞ்சைப் பிளக்கும் நிசப்தம் அந்த வீட்டிலே குடிகொண்டிருந்தது. கூடத்தில் சிறிய விளக்கொன்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. நடையில் படுத்துக் கிடந்த ஸ்ரீமதி அகிலாண்டம் காலடிச் சத்தம் கேட்கவே திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து, “யாரது ?” என்று நடுங்கிய குரலில் கேட்டாள்.

காரணமில்லாமலே வாஸுவின் நெஞ்சு ‘பக்’ கென்றது. “ஏன், நான்தான் !” என்றான்.

“எண்டா !—நாளும், கிழமையுமா இத்தனை நாழி எங்கேடா போயிருந்தாய் ? நல்லவேளை ! இப்போதாவது வந்தாயே ! போய், விசாலத்தைச் சாதம் போடச் சொல்லிச் சாப்பிடு, போ !” என்றாள் ஸ்ரீமதி அகிலாண்டம்.

அவள் குரலில் எல்லையற்ற பரபரப்பும், அதே சமயம் ஒருவிதமான — இன்னதென்று சொல்லமுடியாத சாந்தியும், பரிவுங்கூட இருந்தது.

கூடத்திற்குச் சென்றான்.

மங்கின விளக்கொளியில் அங்கே வெறும் தரையில், அலங்கோலமாகப் படுத்துக் கிடந்த விசாலத்தைக் கண்டதும் அவனுக்கு மறுபடியும் ‘சுரீர்’ என்றது.

விசாலம் தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

எதிரே நின்று கொண்டிருந்த வாஸுவை ஒரு நிமிஷம் உற்று நோக்கிய அவளது

கருகிய வதனம் மறு க்ஷணமே சூரியனைக் கண்ட தாமரைபோல் மலர்ந்தது.

மிருதுவான குரலில் எல்லை மீறிய படபடப்புடனும், அதே சமயம் அளவற்ற ஆனந்தத்துடனும் — "அம்மா! நல்லவேளை! வந்து விட்டீர்களா!" என்றாள் விசாலம்.

மறுநாள் திருக் கார்த்திகை.

வாஸு தன் வீட்டுக் கூடத்தில் ஈஸிசேரில், உள்ளத்தில் நிலவிய சாந்தி முகத்தில் விளங்க, விச்ராந்தியாகச் சாய்ந்து கொண்டிருந்தான்.

புதுப் புடவையின் சலசலப்புடனும், கைவளைகள் ஒன்றோடொன்று மோதிக் குலுக்கும் இனிமை நிறைந்த ஒலிப்புடனும், மஹாலக்ஷ்மியைப்போல் — இங்கு மங்கும் போய்க் கொண்டிருந்த விசாலம் அகல் விளக்குகளையெல்லாம் ஒவ்வொன்றாக ஏற்றினாள்.

பிறகு, வாஸுவின் பக்கம் திரும்பி, அவனைக் காதற் கண்களால் நோக்கிய படியே, "இப்படி வந்து கிழக்குப் பார்த்து நில்லுங்கோ!" என்று அதிகாரத்துடன் கொஞ்சினாள். வாஸு எழுந்து சென்று அவளெதிரில் நின்றான்.

"என் தப்பிதங்களையெல்லாம் மறந்து என்னை நீங்கள்தான் ஹிருதய பூர்வமாய் மன்னிக்க வேணும்!" என்று சொல்லிக் கொண்டே நமஸ்காரம் செய்தாள்.

அப்புறம் விசாலம் தன் மாமியாரை நமஸ்கரிக்க வாசற்புறம் சென்றாள். அவள் பின்னாலேயே அவனும் போனான்.

அப்போது வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த ஸ்ரீமதி அகிலாண்டத்தின் குரல் பின்வருமாறு கேட்டது: "என்னவோ அம்மா கோவிச்சுண்டு போன பிள்ளை இந்த மட்டும் திரும்பி வந்தானே, அதுவே பெரிசு! என் மேலேயும் தப்பு இருக்கத்தான் இருக்கு. இந்த வயசிலே அதுகளுக்கும் எப்படி யெப்படி யெல்லாமோ இருக்கணும்னு ஆசையா யிருக்குமோல்லியோ!"...

தெருப்பக்கம் தலையை நீட்டினான் வாஸு.

அந்தி மயங்கும் அந்த நேரத்தில், அந்தச் சிறிய கிராமத்து வீதியின் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அடுக்கடுக்கான அகல் தீபங்கள் அலங்காரமாகத் தலையசைத்தபடி கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்தன.

நாமக்கல் கவிஞர் நிதி

மேற்படி நிதியின் பொக்கிஷதார் ஸ்ரீ வை. கோவிந்தன் அறிவிக்கிறார்:

கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் தலைமையில் நாஞ்சில் நாட்டில் வசூலானது ரூ.	234	0	0
ஸ்ரீ கே. நாச்சியப்பக் கவுண்டர், ஜில்லா போர்டு பிரசிடெண்ட், சேலம்	150	0	0
நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம்	101	0	0
ஸ்ரீ ஆர். பத்மநாபன், காரியதரிசி, தமிழ்ச் சங்கம், மாதுங்கா	51	0	0
ஸ்ரீ எஸ். ராஜகோபால் ஐயர், சுப்ரமண்ய லாட்ஜ், நாமக்கல்	50	0	0
ஸ்ரீ நாடோடி, கல்கி, சென்னை	25	0	0
ஸ்ரீ சாவி, கல்கி, சென்னை	25	0	0
இருபது ரூபாய்க்கு உட்பட்ட நன்கொடைகள்	142	4	0
முன் வரவு	5653	3	0
ஆகமொத்தம் வரவு	6431	7	0

★

கோயமுத்தூர் ஸ்ரீ கே. சுப்ரமணியம் ('சுப்ரி') பின்வரும் அன்பர்களிடமிருந்து நாமக்கல் கவிஞர் நிதிக்காக வசூலித்த நன்கொடைகளை அனுப்பியிருக்கிறார். அவருக்கும் நன்கொடையளித்த நண்பர்களுக்கும் நமது நன்றி. தொகை ரூ. 96ம் ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.


ரூ. 20—0—0: ஸ்ரீ வி. கே. பழனிஸ்வாமி கவுண்டர்; ரூ. 15—0—0: ஸ்ரீ எஸ். ஏ. நாராயண சாஸ்திரி; ரூ. 11—0—0: ஸ்ரீ ஏ. ஆர். நாகமாணிக்கம்; ரூ. 10—0—0: ஸ்ரீ எஸ். எம். பழனி கவுண்டர், ஸ்ரீ பி. நாகஸ்வாமி கவுண்டர், ஸ்ரீ பி. என். காளியப்ப கவுண்டர், ஸ்ரீ பி. கே. தனஸ்வாமி; ரூ. 5—0—0: ஸ்ரீ முத்துகிருஷ்ணஸ்வாமி நாயுடு, ஸ்ரீ கே. ஆர். சுப்பராய கவுண்டர். ஆக ரூ. 96—0—0

★

23-5-45 நாமக்கல் கவிஞர் ஸ்ரீ இராமலிங்கம் பிள்ளையின் முன்னிலையில் நாகப்பட்டணத்தில் நடந்த "கவியின் கனவு" நாடகத்தில் வசூலான தொகையில் வரிபோக பாக்கி ரூ. 875-ஐ சக்தி நாடக சபையின் சொந்தக்காரர் ஸ்ரீ டி. கே. கிருஷ்ணசாமி நமக்கு அனுப்பியிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேற்படி தொகை ரூ. 875-ம் கவிஞர் நிதியின் பொக்கிஷதார் ஸ்ரீ வை. கோவிந்தன் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

★

நாமக்கல் கவிஞருக்கு நிதி முடிப்பு அளிக்கும் வைபவத்துக்குக் கூடிய சீக்கிரத்தில் தேதி குறிப்பிடப்படும். நிதியில் தங்களுடைய பங்கையும் சேர்க்க விரும்பும் நண்பர்கள் சிறிது துரிதப்படுமாறு கோரப்படுகிறார்கள்.



யுத்தகாலத்தின் கட்டுப்பாடுபண்ண ரெயில் போக்குவரத்தில் பிரயாணம் ஆனந்தத்தி லிருந்து கடினமான செயலாக மாறிவிடுகிறது. யுத்தத்திற்கு முன் இருந்ததைவிட சத்தமும் அதிகம். புக்கிங் ஆபீஸ்கள், பிளாட்பாரங்கள் முக்கியமாக ரெயில்வண்டிகளும் அதிக ஜன நெருக்கமுள்ளதாயும் அசௌகரியமாகவும் இருக் கிறது. பிரயாண சமயம் ஆகாராதிகள் கிடைப் பது கஷ்டம். உண்மையில் அவசியம் இருந்தா லொழிய பிரயாணம் செய்வது மதியீனமே.

ஆனாலும் அவசியம் பிரயாணம் செய்யவேண்டிய வர்கள் எல்லா ஸ்டேஷன்களிலும் ஒரு விரும் பத்தக்க காட்சியை காண்கிறார்கள். அதுதான் டீ விற்பவன். வெயில் காலத்தில் குளிர்ச்சியையும், குளிர் காலத்தில் உஷ்ணத்தையும் கொடுக்கும் டீ எப்பொழுதும் கிடைக்கிறது. அது அதிக செலவற்றது. ரெயிலில் போகும்போது அல்லது எந்த இடத்திலும் நீங்கள் அசௌகர்யப்பட்டு சோர்வடைந்தோ அல்லது கவலையுடன் இருந்தாலும் டீ உங்களை கிளர்த்தி உற்சாக மூட்டுவதை காண்பீர்கள்.



இந்தியன் டீ

சோர்வடையும் சமயம் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK 258 T

கீதையின் தோற்றம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

யுத்தம் துவக்குவதற்கு முன் இரு பட்சத்து வீரர்களும் கூடி, அந்தக் காலத்துப் பண்பாட்டிற்குப் பொருந்திய பிரதிக்ஞைகளைச் செய்தார்கள். யுத்த முறைகள் காலத்துக்குக் காலம் மாறிக் கொண்டே வருகின்றன. அந்தக் காலத்து யுத்த முறைகளை நினைவில் வைத்துக் கொண்டு படித்தால்தான் பாரதம் விளங்கும். இல்லாவிட்டால் சிற்சில இடங்களில் நிகழ்ச்சிகள் அசம்பாவிதமாகத் தோன்றும்.

பாரத யுத்த விதிகள்: ஒவ்வொரு நாளும் போர் முடிந்த பிறகு இரு தரப்பினரும் பிரீதியுடன் கலக்கவேண்டும். யுத்தத்தில் யாருமே தத்தம் சமானஸ்தர்களையே தாக்கவேண்டும். அதர்ம முறையில் யார் பேரிலும் யுத்தம் நடத்தக் கூடாது. சேனையின் மத்தியிலிருந்து விலகிப் போகிறவர்களை ஒரு பொழுதும் கொல்லக் கூடாது. தேர் ஏறினவன் தேர் ஏறினவனையும் யானை வீரன் யானை வீரனையும் குதிரை ஏறியிருப்பவன் குதிரை ஏறியிருப்பவனையும் காலாள் காலாளோடுமே சண்டை செய்ய வேண்டும். எதிரியை நம்பிப் போரை நிறுத்தினவன் மீதும், பயந்து ஒடுங்கினவன் மீதும், ஆயுதம் பிரயோகிக்கக் கூடாது. வேறு ஒருவனோடு போர் செய்து கொண்டிருக்கும் ஒருவனைப் போரில் கலந்து கொள்ளாமல் நிற்கும் மற்றொருவன் ஆயுதப் பிரயோகம் செய்து கொல்லக் கூடாது. ஆயுதம் இழந்தவனையாவது கவனம் செலுத்தாமல் இருப்பவனையாவது புறங்காட்டி ஓடுபவனையாவது கவசம் இழந்தவனையாவது கொல்லக் கூடாது. ஆயுதங்களை எடுத்துக் கொடுக்கும் பணியாட்கள், பேரிகை அடிப்பவர்கள், சங்கம் ஊதுகிறவர்கள் இவர்கள் மேல் ஆயுதங்கள் பிரயோகம் செய்யலாகாது. இவ்வாறு யுத்த முறையைக் கௌரவ பாண்டவர்கள் இருவரும் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள்.



காலப் போக்கில் நியாய அநியாயக் கோட்பாடுகள் மாறுதல் அடையும். இக்காலத்தில் போர் என்றால் போரில் உபயோகிக்கப்படும் எல்லாச் சாதனங்களும் குதிரைகள் முதலிய ஊமைப் பிராணிகளும் சிகிச்சைக்கு

வேண்டிய மருந்தும் கூட அழிக்கப் படலாம். எவ்வித வரம்பும் கிடையாது. முற்காலத்தில் இவ்வாறல்ல.

அக்காலத்தில் பின்பற்றிவந்த நியமங்களும் அக்காலத்திலேயே சில சமயங்களில் பல காரணங்களினால் புறக்கணிக்கப் பட்டதாகப் பாரதக் கதையில் நிச்சயமாகக் காணப்படுகிறது. விசேஷ சந்தர்ப்பங்களும் காரணங்களும் கூடி நியதிகள் சில சமயம் புறக்கணிக்கப்பட்டு வரவர நியதியே அழிந்து போய்ப் புது நியதி உண்டாகும். பாரத யுத்தத்தில் வரம்பு கடந்த செயல்களும் சிற்சில சமயங்களில் நடைபெற்றன. ஆனபோதிலும் பொதுவாக மேற்கூறிய நியதிகளை எல்லாரும் ஒப்புக்கொண்டு அதன்படியே நடந்தார்கள். விதிகள் புறக்கணிக்கப்பட்ட போது, அதை எல்லாரும் நிந்தித்தார்கள். புறக்கணித்தவர்கள் வெட்கமடைந்தார்கள்.

*　　*　　*

“வீரர்களே! இதோ உங்களுக்கு எதிரில் சுவர்க்க வாயில் திறந்து நிற்கிறது. இந்திரனுடனும் பிரம்மனுடனும் சேர்ந்து வாழும் பாக்கியம் உங்களுக்குக் கிட்டியிருக்கிறது. உங்கள் பெற்றோரும் மூதாதையரும் அவர்களைப் பெற்ற முன்னோர்களும் சென்ற வழியில் நீங்களும் செல்லுங்கள். வெற்றி அல்லது சுவர்க்கம் உங்கள் முன் நிற்கிறது. இதுவே உங்களுடைய குலங்களின் சனாதன தருமம். மனக் கவலையின்றி மகிழ்ச்சியுடன் போர் புரிந்து புகழும் மேன்மையும் அடையுங்கள். வீட்டில் வியாதியினால் மரணம் அடைதல் க்ஷத்திரியனுக்குத் தகாது. ஆயுதத்துக்கு இரையாவதே க்ஷத்திரியனுடைய தருமம்.”

இவ்வாறு சேனாபதி பீஷ்மரால் தூண்டப்பட்ட அரசர்கள் பேரிகை முழக்கம் செய்துகொண்டு கௌரவர்களுக்கு வெற்றியும் புகழும் உண்டாக்கித் தர யுத்தம் துவக்கினார்கள்.

பீஷ்மருடைய கொடியில் பனைமரமும், அதற்கு மேல் ஐந்து நட்சத்திரங்களும் பிரகாசித்தன. சிம்மத்தின் வாலுடன் அசுவத்தாமன் கொடி காற்றில் ஆடிற்று. துரோணருடைய பொன் நிறத் துவஜத்தில் கமண்டலுவும் வில்லும் பிரகாசித்தன. துரியோதனனுடைய புகழ் பெற்ற கொடியில் பாம்புப் படம் ஆடிற்று. கிருபருடைய கொடியில் காளை. மாடுப், ஜயத்ரதனுடைய கொடியில் பன்றியும் இவ்வாறு இன்னும் பல வீரர்கள் தேரில் பலவிதக் கொடிகள் பறந்தன.

*　　*　　*

அணிவகுக்கப்பட்ட கௌரவ சேனையைப் பார்த்து யுதிஷ்டிரன் அருச்சுனனுக்குக் கட்டளையிட்டான்:

“பகைவர்களுடைய படை மிகப் பெரிதாக இருக்கிறது. குறைவாக இருக்கிற நம்முடைய படையை விஸ்தாரப்படுத்தாமல் குவித்துப் போர் புரியவேண்டும். அகலமாக விரிந்தால் நம்முடைய சேனைக்குப் பலக்குறைவு ஏற்படும். ஊசிமுக வியூகமாக நம்முடைய படையை அணிவகுப்பாயாக” என்று தனஞ்சயனுக்கு உத்தரவிட்டான்.

இவ்வாறு இருபக்கத்திலும் சேனைகள் அணிவகுக்கப்பட்டு நின்றதும் அருச்சுனனுக்கு உண்டான மனக் கலக்கமும் அதைத் தீர்க்கக் கிருஷ்ணன் உபதேசித்த கருமயோகமும் உலகப் பிரசித்தம். அப்போது கண்ணனுடைய வாக்கில் தோன்றிய பகவத் கீதை என்கிற உபதேச மொழிகள் உலகத்தில் எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலைமையை விரும்பவர்களுக்கும், எந்த குண விசேஷங்களுடன் பிறந்தவர்களுக்கும் உய்யும் வழிகாட்டி உதவும் படியான சாஸ்திரமாகப் பெரியோர்களால் கருதப்பட்டு வருகிறது.



க்ஷவரக்காரர்:—ஸார், உங்களுக்குக் கிராப் வெட்ட வேண்டுமா? முக க்ஷவரம் செய்து கொள்ள வேண்டுமா?”

வந்தவர் (வெகு நேரம் காத்திருந்து அலுத்துப் போய்):—நான் இங்கே வரும்போது கிராப் மட்டும்தான் வெட்டிக் கொள்ள வேண்டுமென்றிருந்தேன். இப்போது முக க்ஷவரமும் செய்து கொள்ள வேண்டும்.

—கே. ஆர். கே.

காலக்ஷேபம்

காக்காய் விஷய

ஒரு கிராமப் பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் வந்தார். ஒரு வகுப்பைப் பரிக்ஷிக்கும்போது ஒரு பையனிடம் வேடிக்கையாக "இந்த ஊரில் எத்தனை காக்காய் இருக்கிறது?" என்று கேட்டார்.

பையன் :—13,542 காக்காய்கள்.

இன்ஸ் :—அதிகமாய் இருந்தால்?

பையன் :—அடுத்த ஊரிலிருந்து விருந்துக்கு வந்திருக்கும்.

இன்ஸ் :—குறைவாய் இருந்தால்?

பையன் :—அடுத்த ஊருக்கு விருந்துக்குப் போயிருக்கும். —வி கிருஷ்ணன்.

★

எங்கும் லஞ்சப் பேய்

குடியானவன் (மேல் அதிகாரியைப் பார்த்து):—சுவாமி! எல்லா கிராமச் சிற்றதிகாரிகளும் லஞ்சம் வாங்குகிறார்கள். நீங்கள் அவர்களைக் கண்டித்து எங்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டும்!

மேல் அதிகாரி :—அவ்விதமே செய்கின்றேன். அதற்கு, எனக்கு நீ எவ்வளவு தருவாய்? —ஆர். எஸ். ஆர். சந்திரன்.

★

மூன் ஜாக்கிரதை

உபாத்தியாயர் :—ரங்கா! நீ இப்போது டோக்கியோவுக்குப் போவதாய் வைத்துக்கொள். போகும்போது எந்தெந்த துறைமுகங்களைக் கடந்து செல்வாய்?

(ரங்கன் சற்று நேரம் வரை யோசித்துக் கொண்டிருந்தான்.)

உபாத்தியாயர் (கோபமாக):—என்னடா யோசிக்கிறாய்?

ரங்கன் :—இல்லை ஸார்! இந்த யுத்த காலத்திலே டோக்கியோவுக்குப் போவது அபாயமாச்சே என்றுதான் ஸார் யோசிக்கிறேன்! —கே. ஏ. எஸ்.

பத்திரிகைச் செய்தி

தினசரிப் பத்திரிகை ஒன்றில் "கா. ர. உ. செட்டியார் இறந்துவிட்டதற்காக வருந்துகிறோம்" என்று வெளியிடப்பட்டிருந்தது.

இதைக்கண்ட செட்டியார் தாம் உயிரோடிருக்கும்பொழுது இவ்விதம் தன்னை அவமானம் செய்ததற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாவிடில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகப் பயமுறுத்தினார். பத்திரிகை ஆசிரியரும் சம்மதித்தார்.

மறுநாள் பத்திரிகையில் கீழ்க்கண்ட அறிக்கை வெளிவந்தது:—"கா. ர. உ. செட்டியார் இறந்ததாக வெளியான செய்தி தவறு என்றும், அவர் உயிரோடிருக்கிறார் என்றும் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்."

—தி. ந. ஸ்ரீனிவாசன்.

★

ஜீவகாருண்யம்!

பிரசங்கி (வண்டிக்காரனிடம்):—டேய் முனியா! மாட்டை நன்றாக அடித்து ஓட்டடா! ஜீவகாருண்ய சபைக்குப் பிரசங்கம் செய்வதற்குப் போகவேண்டும்; நாழியாகி விட்டது. —ந. வே. நடராஜன்.

★

துணி விலை!

நீதிபதி :—துணிகளை எடுப்பதற்காகவா இரவில் பூட்டை உடைத்துக் கடையில் புகுந்தாய்?



குற்றவாளி :—ஆமாம்; எனக்கும் வீட்டில் இருப்பவர்களுக்கும் உடுத்திக்கொள்ள ஒரு துண்டுகூட இல்லை.

நீதிபதி :—அப்படியானால் இரும்புப் பெட்டியை ஏன் திறந்தாய்?

குற்றவாளி :—துணிகளின் விலையத்தைப் போடுவதற்கு! —எஸ். ஜி. பாலு.

ஏது உண்மை?

சசிதேவி

நடுப்பகல் மணி ஒன்றிருக்கும். வீட்டில் ஒருவருமில்லை. என் கணவர் ஏதோ காரியார்த்தமாக வெளியூர் போயிருந்தார். குழந்தைகளும் பள்ளிக்கூடம் போயிருந்தார்கள். பொழுதே போகவில்லை. சித்ரா தேவியின் அருளை வேண்டிப் படுத்தேன். அவளருள் அவ்வளவு சுலபமாகக் கிட்டக் கூடியதா? முப்பத்துமுக்கோடி தேவர்களின் அருளையும் நிமிஷத்தில் பெற்றுவிடலாம்! நிராகரித்தாலும் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சித்ரா தேவியின் நிர்த்தாக்ஷண்யமான நிராகரிப்பைப் பொறுக்க முடியுமோ? மனிதருக்குத் தேவையான முக்கிய வஸ்துக்கள் மூன்றில் முதலிரண்டான உண்டியும் உடையும் அதிகாரிகளின் கையில் ஏற்பட்டிருக்கும் அளவுகோலின்படி அடைந்து கொண்டிருக்கிறோமே! மூன்றாவதான உறக்கத்தையும் ஒரு வேளை பங்கீடு விதி பற்றி விடுமோ? — என்று இவ்வாறு ஏதோ எண்ணமிட்டுக் கொண்டு படுத்திருந்தேன்.

யாரோ தெருக்கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. யாரென்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தேன். எதிரில் அடுத்த அகத்து ஸரஸ்வதி காட்சியளித்தாள். அவளை "வா" என்று அழைத்துக் கொண்டு இருவருமாகத் தாழ்வாரத்தில் வந்து உட்கார்ந்தோம். ஸரஸ்வதி கீழே கிடந்த ஒரு பழைய புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்து விட்டாள்.

ஸரஸ்வதிக்கு வயது சுமார் இருபத்திரண்டு. நல்ல வளர்த்தியான தேகம். வயதுக்குத் தக்க இளமை இல்லாமல், பகுத்தறிவற்ற மனோபாவத்தினால் ஏற்படும் நாகரிக அலங்காரங்களினால் உண்டான ஒரு முதுமை முகத்தில் படர்ந்திருக்கும். மாநிறம். சாதாரணமாக இருந்தால் பார்க்கும்படியாக இருக்கும் முகத்தைத் தன்னுடைய கைத் திறத்தினாலோ, தவறினாலோ, விகாரப் படுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் புருஷனுக்குத் தாலூகா ஆபீஸில் 'எக்ளாக்' (ஹெட் க்ளார்க்) வேலை. தாலூகா குமாஸ்தா வேலை என்றால் ஜட்கா வண்டியில் பூட்டின குதிரையின் உழைப்புதான். அவருடைய வாழ்க்கைப் பாதையில் ஏற்படும் மேடு, பள்ளங்களை [illegible] சாவகாசம் கிடையாது. சவுக்கடிக்குப் பயந்து ஓடும் அவருடைய வேலையில் அவருக்குச் சலிப்போ, களைப்போ இல்லாதது ஆச்சரியம்தான். ராமனாதய்யருக்கு—அதுதான் ஸரஸ்வதியின் கணவருக்கு—வயது ஐம்பது. ஸரஸ்வதி இளையாள்.

ராமனாதன் எப்படி இருப்பார் என்று பார்க்க வேண்டுமானால், தாலூகா ஆபீஸ் வாசலில் காலை 9 மணி சுமாருக்குப் போய் நின்று கொண்டிருந்தால் பார்க்கலாம். ராமனாதன் மன்மதனல்ல. ஐம்பது வயதில் யார்தான் மன்மதனாக இருக்கமுடியும்? அதுவும் வயிற்றை வஞ்சனை செய்யாதவரும், பஞ்சாங்க முகூர்த்தப்படி க்ஷவரம் செய்து கொள்பவரும் எவ்விதம் மன்மதனாக இருக்க முடியும்? பழுப்படைந்த பஞ்சகச்சம் வைத்து உடுத்திய வேஷ்டி, நுனியில் தையல் விட்டுப்போன ஜெயிலர் ஷர்ட், கழுத்தை மூடிப் பழைய மோஸ்தரில் தைத்த அல்பாகா கோட்டு, அந்தக் கோட்டுக்குப் பொத்தான்களே இருக்காது. கோட்டின் கையைவிடச் சட்டையின் கை நீளமானது. ஆகையால் அது கோட்டின்மேல் மடக்கப்பட்டிருக்கும். ஒருவேளை அது அவருடைய முதல் விவாக காலத்தில் எதிர்க்கொண்டழைக்க அவர் மாமனாரால் அளிக்கப்பட்ட கோட்டோ என்னவோ! அதனால்தான் அதை விடாமல் பக்ஷமாக அணிந்து கொண்டிருக்கிறார். காலக்கிரமத்தில் அவருக்கு ஏற்பட்ட வளர்ச்சியின் பயனாய் அது அரை வயிற்றை மூடிக்கொண்டு தன்னால் முடிந்த சேவையைச் செய்துகொண்டிருக்கும். ஸ்னானம் செய்த தலைமயிர் காற்றில் பறந்து கொண்டிருக்கும். ஒரு கையில் தலைப்பாகையுடனும், மற்றொரு கையில் ஜமக்காளப் பையில், பழுப்பு நிறமான தாலூகா ஆபீஸ் காகிதச் சுமையுடனும் கருமமே கண்ணாய் ஓட்டமும், நடையுமாக வருவார். சற்று அஜாக்கிரதையாக நடந்தாரானால் காலிலுள்ள செருப்பு கொடித்து, திருச்சிற்றம்பலத்

தில் ஆனந்தக் கூத்திட்டு, ஒரு காலைத் தூக்கி உலகுய்ய நின்றாடும் விரிசடைக் கடவுளை நினைவு மூட்டிவிடும். இவ்விதமான இக்கட்டுகளை நீக்கிக்கொண்டு கேட்டினிடம் வரும்பொழுது முள்ளைக் கூடப் பிசகாமல் சரியாக மணி 9-25 இருக்கும். அவர் வருவதைப் பார்த்து நம் கடிகாரத்தைக் கூடச் சரி செய்து கொள்ளலாம். மணிமாறும், காலம் மாறும்; ஆனால் உலகமே மாறினும் அவருடைய தோற்றமும், நடத்தையும் மாறாது.

ராமனுதய்யர் எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் ஒண்டுக் குடி இருக்கிறார். ஒரு சிறு கூடமும் இரண்டு அறைகளும்தான் அவர்களுடைய வாசஸ்தலம். முன்னறைதான் ஐயருடையது. மற்றொன்று சமையலுக்கு. கூடத்தில் படுக்கை. ஒரு சின்ன அலமாரியில் ஸரஸுவின் அலங்காரப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தது. பிச்சைக்காரன் தலையில் பட்டுக் குல்லா வைத்தது போல் இருந்தது.

ஐயருடைய ஆஸ்தான அறை நல்ல இருட்டு. பகலிலேயே இருண்டுதான் இருக்கும். எவனோ ஒரு மேதாவி "இந்தியாவில் இரண்டு சீதோஷ்ண நிலைதான் உண்டு. அதாவது "வெய்யில், கடும் வெய்யில். குளிர் காலமே கிடையாது" என்றானாம். அதுபோல் ஐயர் அறை பகலில் இருட்டு, இரவில் கும்மிருட்டு, அவ்வளவுதான். வெளிச்சமே கிடையாது. ஊரின் விளக்கு ஏற்றும் நேரம், அட்டவணை இவற்றையெல்லாம் அது மதிக்காது.



அவர் வீட்டில் குடி இருப்பவர் ஒரு நாள் அவரைக் கிண்டலாக "என் ஸார்! நீங்கள் இந்தப் பழைய கோட்டையே போட்டுக் கொண்டு திண்டாட வேண்டும்? புதிதாக ஒன்று தைத்துக் கொள்ளக் கூடாதோ?" என்று கேட்டாராம்.

அதற்கு ராமனுதய்யர், "எல்லோரும் உங்களைப்போல் கக புருஷராக இருக்க முடியுமா ஐயா?" என்று சொல்லி அவரைத் தட்டிக் கழித்து விட்டு, அன்றிரவு என் கணவரிடம் வந்து தம்முடைய குறைகளை முறையிட்டுக் கொண்டார். "உங்களுக்குத் தெரியாதா ஸார், என் பிழைப்பு! அந்த மனிதன் என்னை இப்படிக் கேட்கிறானே! அவனுக்கு எவ்வளவு அகம் என்கிறேன்! எனக்கு வரும் சம்பளமோ 65 ரூபாய். சிலரைப்போல் மேல் வரும்படி வாங்க மனச்சாக்ஷி இடம் கொடுக்கவில்லை. என்ன செய்வது சொல்லுங்கள்! என்ன பாவம் பூர்வ ஜன்மத்தில் பண்ணியோதான் இந்த உத்தியோகம் லபித்திருக்கிறதே! இன்னும் ஏன் ஸார் லஞ்சம் வாங்கும் பாவத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்? வருகிற 65 ரூபாயில், நான் குடி இருக்கும் அரண்மனைக்குப் பத்து ரூபாய் வாங்கி விடுகிறான். அவனுக்கு ஜெரிக்குமா ஸார்! மளிகைச் செலவு என்ன குறைத்தாலும் இருபது ரூபாய் கணக்கு வந்து விடுகிறது. பால்காரனுக்கு ஐந்து ரூபாய், காப்பி சாப்பிடாமல் இருக்க முடியவில்லையே! எவ்வளவு? முப்பத்தைந்து ஆயிற்றா? ஸரஸுவின் கைச் செலவுக்கு ஐந்து ரூபாயாவது கொடுக்கா விட்டால் என்னைப் பிணமாய்ப் பிடுங்கி விடுகிறாள். அவளுடைய அலங்காரப் பொருள்களுக்கு அதுவே போதவில்லையாம்! எப்படி இருக்கிறது பார்த்துக் கொள்ளுங்கள்! இந்தக் காலத்துப் பெண்களுக்கு எங்கே அகவிலை தெரிகிறது ஸார்! என் கல்யாணத்துக்காக வாங்கிய கடனை அடைக்க மாசம் 15 ரூபாய் பிடித்துக் கொண்டு விடுகிறான் ஆபீஸில். மிச்சம் இருக்கும் பத்து ரூபாயையும் ஒரு வருஷமாக இன்ஷூர் செய்ய நினைத்து ஒரு தவணை கட்டினேன் ஸார்! மனித வாழ்வு என்ன நிச்சயம்? இவளுடைய நன்மைக்காகத்தான் கட்ட ஆரம்பித்தேன்.

அதற்குள் இவனுக்குப் பொறுக்கவில்லை. அந்தப் பணத்தை வாங்கி அதில் பாட்டு வாத்தியார் வைத்துப் பாட்டுச் சொல்லிக் கொள்கிறான் ஸார்! பாட்டு! ரேடியோவில் பாடப் போகிறானாம்! எப்படி இருக்கிறது? இவன் நிலைமையில் என்ன வேண்டி இருக்கும் ஸார்! வயிற்றுப் பாட்டுதான் பெரிதாக இருக்கிறதே? இந்த லக்ஷணத்தில் கிராமத்தில் இருக்கும் தாயார் வேறு பணம் அனுப்பவில்லை என்று கடிதத்தின்மேல் கடிதம் எழுதுகிறான். இவ்வளவு பிடுங்கல் பட்டுக்கொண்டு சர்க்காருக்கு உழைத்து ஓடாகப் போய்க் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து அந்த வெறும் தடியன்—என் வீட்டில் குடியிருக்கிறவன்—'புதுக் கோட்டு தைத்துக்கொள்ளவில்லையா?' என்று குசலம் கேட்கிறானே! இவனுக்கு என்ன ஸார் கொழுப்பு? நான் எந்த மாசம் சம்பளம் மீத்திப் பணம் சேர்த்துத் துணி வாங்கிக் கோட்டு தைத்துக் கொள்வது?'' என்று சரமாரியாக அடுக்கினார். அவர் சொல்வது அவ்வளவும் கலப்பற்ற உண்மை என்பதை அவர் முகமே காட்டிற்று. அவருடைய பரிதாபத்தை நாங்கள் உணர்ந்தோம். பாவம், அவர் ரொம்ப நாழி கழித்து வீட்டுக்குப் போனார்.

இவ்வளவு கறார் பேர்வழியாக இருக்கும் ராமநாதய்யருக்குச் சரஸுவிடம் மாத்திரம் கறாராக இருக்க முடியாது. அவர்கள் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திலும், சண்டையிலும், ஐயருக்குத்தான் தோல்வி. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் ஐயர் வெற்றிகரமாகப் பின் வாங்கிவிடுவார்.

இவ்விதமான மனோலோக சஞ்சாரத்திலிருந்த என்னை "என்ன யோசனை பலமாக இருக்கிறதே?" என்ற ஸரஸுவின் குரல் கலைத்தது. "மூளைக்கு ஏதாவது வேலை வேண்டாமா? உன்னைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றேன்.

"என்னைப் பற்றி என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்?" என்றாள்.

"நீ பாட்டு சொல்லிக்கொள்ள ஆரம்பித்து நாலு மாத மாகிறதே! எப்பொழுது ரேடியோவில் பாடப் போகிறாய்?"

"என்னடி செய்கிறது? நானும்தான் பத்து நாளாக இவரிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு நாள் மனு எழுதிப் போட்டுவிட்டு, வரச் சொன்னால் 'ஆடிஷனுக்கு'ப் போகலாமென்று. வாத்தியார்கூட நன்றாகப் பாடுகிறேன் என்றுதான் சொல்கிறார். இவர் எதற்கும் பிடிகொடுத்துப் பேசினால்தானே! அவமானமாக இருக்கிறதாம்!"

"என்ன அவமானம்! உன்னை அழைத்துப் போகவா? உனக்கென்ன அழகில் குறைவா? ஸரஸுக்கு, நாகரிகம் எதிலாவது மட்டமா? நன்றாகப் பாடவில்லையா? என்னத்துக்கு அவமானமாம்? நான் மட்டும் உன்னைப் போல் பாடுவதானால் எங்காத்துக்காரர் என்னை உடனே அழைத்துப் போய் ஒரு சான்ஸாவது வாங்கிக் கொடுத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்!"

"அதற்கெல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா? முதலில் அப்ளிகேஷனே போடவில்லையேடி!"

"மூந்தா நாள் யாரோ ரேடியோவில் 'சரஸ்வதி ராமநாதம்' என்று ஒருத்தி பாடினாள். ஒரு வேளை நீதானோ என்றுகூட நினைத்தேன். அதற்கேற்றாற்போல் உன் வீடும் பூட்டி இருந்தது. என்னிடம் முதலிலேயே சொல்லாமல் போனதற்காக உன்னோடு சண்டை போடவேண்டுமென்று நினைத்தேன். பிறகுதான் நீ இல்லை என்பதைத் தெரிந்துகொண்டேன். குடி இருப்பவன் நீ எங்கோ கோவிலுக்குப் போனதாகச் சொன்னான்."

"ஏனடி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாய்? அப்படி இருந்தால் முன்னால் உன்னிடம் சொல்லமாட்டேனா?"

"மாமாதான் மாசம் பத்து ரூபாய் பாட்டு வாத்தியாருக்குக் கொடுக்கிறாரே?" என்றேன். உடனே வந்து விட்டது, சரஸ்வதி பத்ரகாளியாய் விட்டாள்.

"யார் சொன்னது உனக்கு? எனக்கு அவர் சம்பளம் கொடுத்துச் சொல்லிக் கொடுத்தால் அது வேறு விதமாக இருக்காதா? என் வரவு செலவுக் கணக்கைக் காட்டுகிறேன் பார்க்கிறாயா?" என்றாள். அவள் கணவன் என் புருஷனிடம் சொன்னது பொய்யா? அதைத் தெரிந்துகொள்வதற்காக "சரி, காட்டு பார்க்கலாம்" என்று சொல்லி இருவரும் வாசற் கதவைத் தாளிட்டு விட்டு அவளுடைய வீட்டுக்குப் போனோம். சரஸ்வதி என்னை முன்னறையில் இருட்டில் உட்கார வைத்துவிட்டு உள்ளே போய் ஒரு சின்ன கை விளக்கையும், கணக்கு நோட்டையும் கொண்டு வந்

தான். "உன் வீட்டு நோட் புஸ்தகத்தை நான் பார்ப்பது நியாயமா?" என்று கேட்டேன். சரஸா, "என்ன பிரமாதம்? நமக்குள் என்ன வித்தியாசம்" என்று சொல்லிவிட்டு நோட்டைப் பிரித்துக் காட்டினாள். அதில் வரவு பகுதியில் ஐம்பது ரூபாய் வரவு என்று எழுதி, பால்காரன் 5, மளிகை 20, வீட்டு வாடகை 10 என்று தேதிவாரியாக எழுதி இருந்தது. அதுவரை இருவர் சொன்னதும் ஒற்றுமைதான். பிறகு அடுத்த பக்கத்தில், "அவருக்கு வண்ணான், அம்பட்டன் முதலிய கைச் செலவுகளுக்கு 5."

"மாமியாருக்கு மணியார்டர் பண்ணினது 10—0—0" என்றிருந்தது. இந்த 15 ரூபாயில் இருவருக்கும் லடாய். ஐயர் அவைகளை சரஸ்வதிக்காகச் செலவு செய்வதாகச் சொல்ல, இவள் என்னடாவென்றால் இப்படி எழுதி வைத்திருக்கிறாளே! "அது சரி, ஸரஸா! சம்பளம் 65 ரூபாயில் மிச்சம் 15 ரூபாய்க்கு என்ன செலவு? 50 தானே வரவு வைத்திருக்கிறாய்?" என்றேன். உடனே ஆரம்பித்து விட்டாள், கீறல் விழுந்த கிராமபோன் ப்ளேட் மாதிரி. இவளை ஏன்டாப்பா கிளறினோம் என்று தோன்றி விட்டது எனக்கு. "ஆபீஸிலிருந்து வரும்போதே ஐம்பதுதான் கொண்டு வருவார். பாக்கிப் பணம் எங்கே என்று கேட்டால் ஆபீஸில் கடனுக்காகப் பிடித்துக் கொண்டு விட்டான் என்று சொல்லி என்னை வாயைக் கட்டி விடுவார். எனக்காடி தெரியாது? கடனெல்லாம்தான் போன வருஷமே அடைத்தாகி விட்டதே! கல்லாட்டமா இருந்த எங்க 'மூத்தான்' சங்கிலியை அழித்துப் புளியோடாட்டமா எனக்கு ஒரு வடத்தில் ஒரு சங்கிலி போட்டு விட்டு மிச்சத்தை விற்றுத்தான் கடனை அடைத்தாரே! அதை எந்தத் தெய்வம் கேட்டுப் பிழைக்கிறது? மேல் வரும்படி வாங்குவதே இல்லை என்று சாதிப்பாரடி! மிச்சப் பணம் 15 ரூபாயும் இன்னும் மேல் வரும் தொகைகளையும் சேர்த்து (சற்றுக் குரலை தாழ்த்தி) ஏதோ பண்டு கட்டுகிறாராம். எனக்குத் தெரியாதா என்ன? என் கண்ணில் காட்டாமல் மண்ணில் மறைத்து விட மாட்டாரா! நான் எப்பொழுது பணம் கேட்டாலும் இல்லைப் பாட்டு தான். எங்கப்பா கொடுக்கும் பிச்சைக் காசில் மிச்சப்படுத்தி ஏதோ ஆசை கெட்ட கேடு மாசம் பத்து ரூபாய் கொடுத்துப் பாட்டுச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் அவருக்கும் ஏதாவது முடைக்கு இல்லை என்று சொல்ல மாட்டேன்! பொய் சொன்னால் புழுத்துப் போகிறேனடி! இன்னும் இவர் கையால் எனக்கு ஒரு ஸோப்புக் கட்டி வாங்கக் கூடக் கால் காசு கொடுத்ததில்லை!"

அவள் முகத்தில் சோகமும், ஏமாற்றமும் தெரிந்தது. அவள் சொல்வதும் உண்மை என்று நம்பும்படியாக இருந்தது. அப்பொழுது வாசலில் செருப்புச் சத்தம் கேட்கவே ஸரஸா "மணி ஆறு ஆகிவிட்டது" என்றாள். ராமனுஜய்யர் உள்ளே வந்தார். நானும் எழுந்து வீட்டுக்கு வந்தேன்.

இரவு என் கணவர் ஊரிலிருந்து வந்த பிறகு மத்தியானம் நிகழ்ந்தவற்றைச் சொல்லி "யார் சொல்வது நிஜமாக இருக்கும்?" என்றேன். "ராமனுஜய்யர் பொய் சொல்லவே மாட்டார்" என்றார். "ஸரஸ்வதியும் பாவம், கணக்குக்கூட எழுதி இருக்கிறாளே! எப்படிப் பொய்யாக இருக்கும்?" என்றேன்.

"கணக்கு என்னடி பிரமாதம்? பெரிய பெரிய அரசாங்கத்திலேயே பொருளாதார மந்திரிகள்கூட பட்ஜட்டை ஒருவாறு சரிக்கட்டி விடுகிறார்களே! இது என்னவாம்! அதுவும் அவளுடைய நோட்டுதானே? ஐயர் என்ன எழுதி இருக்கிறாரோ? யார் கண்டது, எது உண்மையோ?"

இவ்விதமாக இருவரும் புரியாமல் குழம்பினோம். உங்களுக்கு ஏதாவது தெரிகிறதா? எது உண்மை?

ஒரு கட்டுக் கதை



ஒரு அம்மாள் அடுத்த வீட்டுக்குப் போய், "கொஞ்சம் சர்க்கரையும் காப்பித் தூளும் இருந்தால் கொடுங்களேன்" என்று கடன் கேட்டாள்.

"ஆஹா! தருகிறேன்" என்று கூறிவிட்டு வீட்டுக்காரி உள்ளே போகும் போது, "ஒரு டம்ளர் பாலும் கொடுத்தால் தேவலை!" என்றாள்!

"அதுவும் தருகிறேனே!"

"அத்துடன் ஒரு சின்ன அடுப்பும், நாலு விறகும் கொடுக்க முடியுமா?" என்று கடன் கேட்க வந்த அம்மாள் கேட்டாள் மேலும்.

பதில் பேசாமல் வீட்டுக்குள் சென்ற வீட்டுக்கார அம்மாள் தானே காப்பியையே தயார் செய்து கொண்டு வந்து கொடுத்தாள்!

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

101. கண்ணுக்கே தென்படும்

ஒரு பெரிய விஷயத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமானாலும் சரி, ஒரு பெரியவரை எடுத்துச் சொல்ல வேண்டுமானாலும் சரி, கற்பனைக் கதை மூலமாகத்தான் முடியும், மற்றப்படி முடியாது என்று சொன்னார் ஒரு மேல் நாட்டுப் பேராசிரியர்.

அகத்திய முனிவரையும் அவரது அரிய செயல்களையும் சொல்ல வந்த நம்மவர்களும் அந்த உத்தியைத்தான் கையாண்டார்கள்.

• • •

நாம் வேறு, கடவுள் வேறு என்ற வித்தியாசம் அற்றுக் கடவுளோடு ஒன்றுவதுதான் யோகம். இந்த யோக நிலையை அடைய ஒட்டாமல் தடுப்பதற்கு ஆணவம் ஒரு மலை போலக் குறுக்கே நிற்கிறது. ஆணவம் வெறும் பாவைதான், எளிதாய் அதைத் தாண்டி விடலாம் என்பதை விளக்கிக் காட்டினார் அகத்திய முனிவர். அது காரணமாக யோக சாதனத்தில் நின்றவர்களுக்கு விஷயம் எளிதாய்ப் போய் விட்டது.

> யோகம்உறு பேருயிர்கள்
> தாம்உலைவு றா மல்
> ஏகும்நெறி யாதெனா,—
> மிதித்(து)அடியின் ஏறி,
> மேகநெடு மாலைதவழ்
> விந்தைஎனும் விண் தோய்
> நாகம்அது நாகம்உற
> நாகம்என நின் றான்

[யோகம் உறு பேர் உயிர்கள்: யோக நிலையை அடைவதற்காக முயலும் ஆன்மாக்கள்; தாம் உலைவுறமல் ஏகும் நெறி யாதெனா: தங்களுக்குக் கஷ்டமில்லாத ஞான மார்க்கத்தைச் சொல்லியருள வேண்டும் என்று விண்ணப்பிக்க; மிதித்து அடியின் ஏறி: காலால் மிதித்து ஏறி (ஆணவமாகிய மலையைத்தான்); மேகநெடு மாலை தவழ் விந்தை எனும்: மேகங்கள் நீண்ட நீண்ட மாலையாகத் தோரணம் கோத்துத் தவழும் விந்திய பர்வதம் என்னும்; விண்தோய் நாகம் அது: ஆகாயத்தைத் தொட்டு நிற்கும் மலையிருக்கிறதே அது! நாகம் உற: பாதாளத்துக்கே போய்த் தொலைய; நாகம் என நின்றான்: தான் ஒரு களிறுபோல, யோகக் கன்றுபோல நின்றார் — அகத்திய முனிவர்.]

குறிப்பு :— உத்ஸாகம் உண்டாகிற காலத்திலும் உத்ஸாகத்தை எடுத்துச் சொல்லும் காலத்திலும் கும்மாளியைக் காட்டும் மடக்குகளும் சொடிப்புகளும் பாஷையில் தாமாக வந்து ஒலிக்கும். அந்த விதமாக ஒலிக்கிறது.

> 'நாகமது நாகமுற
> நாகமென நின் றான்'

என்ற கடைசி அடி. அதை வெறும் சிலேடைச் சிலம்பம் என்று தள்ளி விடலாகாது.]

அகத்திய முனிவர் சகல கலா வல்லவர்; யாருக்கும் தெரியாத விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தார். இமயம் வரையுள்ள பண்பாடு அகத்திய முனிவர் ஒருவரது பண்பாட்டுக்கு இணையாகாது என்பது கொள்கை.

இதைக் கதையாக விளக்குவது எப்படி ?

இமய மலையில் கைலாச கிரியில் பார்வதிக்கும் பரமேசுவரனுக்கும் கலியாணம். கலியாணத்துக்குச் சகல ஜீவகோடிகளுமே வந்து விட்டன. போதாக் குறைக்குத் தெற்கே யிருந்து அகத்திய முனிவரும் வந்து சேர்ந்தார். அப்பாவி இமய மலை என்ன செய்யும், பாரம் பொறுக்காமல் அப்படியே படு பாதாளத்துக்கே போய்விட்டது. அதோடு நிற்க வில்லை; தெற்கேயுள்ள பிரதேசமெல்லாம் பொதிகை மலையும் உள்பட விண்ணுக்குப் போய் அந்தரத்தில் நின்றதுபோல் நிற்கிறது. பூமிக்கு வந்த ஆபத்தைப் பார்த்தார் சிவபெருமான். அகத்தியரைக் கூப்பிட்டுப் பொதிகை மலைக்குப் போகச் சொன்னார். அகத்தியரும் பொதிகையை வந்தடைந்தார். நிராசுக்குச் சமன் ஏற்படுவதுபோல் பூமிக்கும் சமன் வந்து விட்டது.

வட கோடியில் சகல ஜீவராசிகளும், முனிவர்களும் கூடி யிருந்தார்கள். சிவபெருமானும் வீற்றிருந்தார். ஆனாலும் தன்னைத் தனியாகக் குள்ள வடிவில்

அகத்திய முனிவர் அதிகப் பளு உள்ளவராகத் தென் கோடியில் இருந்தார். உலகத்தைச் சமன் செய்தார்.

அவரையும் ஒரு சிவபெருமான் எனவே கருதலாம் அல்லவா?

மூசரவு சூடும்முத—
லோன்உரையில் மூவா

மாசில்தவ! ஏகென,—
வடாதுதிசை மேல் நாள்

நீசம்உற, வானில்வளர்
மாமலயம் நேரா,

ஈசன்நிக ராய்உலகு
சீர்பெறஇ ருந் தான்.

[மூசரவு சூடு முதலோன்: வேகத்தோடு சுவாசம் விடும் ஆதிசேஷனைத் தலையிலே சூடிய சிவபெருமான்; உரையில் மூவா மாசில் தவ: சோர்வுபடாத புகழுடைய தவசியான அகஸ்தியரே; ஏகு என: தென் திசைக்கு நீர் போக வேண்டும் என்று சொல்ல; வடாது திசை மேல் நாள் நீசம் உற: வட திசையானது பளுவில்லாத (பள்ளமடைந்த) திசை என்று கேவலம் அடைய; வானில் வளர் மாமலயம் நேரா: வானில் வளர்ந்து நிற்கும் பொதிகையை அடைந்து; ஈசன் நிகராய்: தான் ஒரு சிவபெருமான் எனவே; உலகு சீர் பெற இருந்தான்: உலகமானது சமனடையும்படி வீற்றிருந்தார் அகத்தியர்.

குறிப்பு:—தமிழ் நாட்டிலுள்ள பண்பாடு மிக உயர்ந்தது என்று வட இந்தியாவிலுள்ள தற்கால சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு வியாக்கியானம் செய்த முறையில் பாடலை அமைக்கிறார் கம்பர்.]

அகத்திய முனிவரைப் பற்றிப் பேசியாய் விட்டது. இனி அந்த முனிவர் ராமனைப் பற்றி எப்படி எண்ணுகிறார் என்று தெரிய வேண்டாமா?

தென்னாட்டுக் கலைகளுக்கெல்லாம், சமய தத்துவங்களுக்கெல்லாம் அதிதேவதையாக விளங்குகிற அகத்திய முனிவர் தானே வடநாட்டு சமய தத்துவ உண்மைகளையும் அறிந்து அனுபவிக்கக் கூடியவர்.

ராமன் என்ற சக்கரவர்த்தித் திருமகன் கடவுள் தத்துவத்தில் நன்றாய்த் திளைத்துள்ளவன்; அதை அவனது தியாகமும் வாழ்க்கையும் எடுத்துக் காட்டுகின்றன; ராமனைக் கடவுளாகவே கருதவேண்டும் என்றெல்லாம் எண்ணுகிறார் முனிவர்.

கடவுள் எங்கும் வியாபித்தவர் அல்லவா?

வானத்திலும் நிறைந்திருப்பவன், பூமிக்குள் நிறைந்திருப்பவன், பஞ்ச பூதங்களில் நிறைந்திருப்பவன், பேரண்டம் முழுதும் வியாபித்துள்ள வஸ்துவின் பேருண்மையிலும் நிறைந்திருப்பவன். இவைகளை எல்லாம் கண்டறிந்து பாடும் வேதங்களிலும் நிறைந்திருப்பவன். இப்படியாக எங்கும் நிறைந்திருப்பவன் என்று ஞானிகள் உணருகிறார்கள். அப்படி அவர்கள் உணரும் உணர்வும் கடவுள் தத்துவந்தான். அந்த உணர்வையே (ராமனையே) கண்ணாரப் பார்க்கப் போகிறேன் நான் என்று ஒரே எக்களிப்போடு பேசுகிறார் முனிவர்!

விண்ணினில் நி லத்தினில்,
விகற்பஉல கிற் பேர்

எண்ணினில் இ ருக்கினில்,
இருக்குமென ஓரும்

உள் நினைவு ணர்வினை
உறப்பெறுவ னால் என்

கண்ணினில்எ னக்கொரு
களிப்புறு மனத் தான்.

[மண்ணினில் நிலத்தினில்: வானத்திலும் பூமியிலுமே; விகற்ப உலகில்: வேறுபட்ட பஞ்ச பூதங்களிலும் அவைகளால் ஆகிய எண்ணிறந்த பேத உருவங்களிலும்; பேர் எண்ணினில்: எப்படி தம்முடைய எண்ணம் உடம்புக்குள் எங்கும் வியாபித்த ஒரு தனித்த மனமிருக்கிறதோ, அப்படியே பேரண்ட முழுவதும் எல்லாப் பொருள்களிலும் நிறைந்து வியாபித்திருக்கிறது — இறைவனது மனசு (பேர் எண்); இருக்கினில் இருக்குமென ஓரும்: ரிக் வேதத்தைப் போன்ற நூல்களிலும் கடவுள் தத்துவத்தைக் காணலாம் என்று உணரும்; உள் நினைவு உணர்வினை: ஞானிகள் தம் உள்ளத்தில் உணர்கிற கடவுளை (அதாவது ராமனைத்தான்); கண்ணினில் உறப் பெறுவனால்: என் கண்ணாலேயே பார்க்கப் போகிறேன்; எனக்கொரு களிப்புறு மனத்தான்: என்று எண்ணிக்கொண்டு ஒரே எக்களிப்பில் எதிர்பார்த்திருக்கிற அகஸ்திய முனிவர்.]

பண்பாட்டைப் பண்பாடே நாடும் என்ற முறையில் முனிவர் ராமனைப் பார்க்க வேண்டுமென்று துடிக்கிறார். அந்தத் துடிப்பை, பாட்டின் துள்ளலில் பார்க்கலாம்.



இதை அளிப்பதிலேயே ஒரு அலாதி அந்தஸ்து

டிலக்ஸ் டெனர் சிகரெட்டை உங்கள் சிநேகிதர்கள் ரஸிப்பார்கள். 100% உத்தர வாதமுள்ள தூய வர்ஜீனியா புகையிலையி லிருந்துதான் டெனர்ஸ் தயாரானவை. டெனர் சிகரெட்டுகள் உங்களது ரஸிகத் தன்மைக்கு ஒரு அத்தாட்சி ஆகும். இவை களின் தனி மணம் இவைகளுக்கே உரித் தானது. மெல்லிய தொண்டை உடைய வர்கள் அனுபவிக்கக் கூடியது டெனர்தான்.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

Tenor *is truly a de Luxe Cigarette*

JAMES CARLTON LTD. LONDON.

கல்கி



KALKI ஜூன் 3, 1945 4 அணா


அழகை
மேன்மை
படுத்துங்கள்
அருணா
அணியுங்கள் ஆடையை
மேனியை அடுத்த
"அருணா" ஆடை
உள்ளத்தை உற்சாகப்
படுத்தும் உழைப்பிற்
குகந்த நிறைவேற்றம்
அருணா மில்ஸ் லி. ஆமதாபாத்

Regd No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.